ஸ0-ரா-ரா—புருஷன் யாகத்துக்கு [illegible] என்பதை [illegible] பாதிக்கிறது. [illegible] புசிப்பது குடிப்பது ஸந்தோஷிப்பது இவைகள் [illegible] பசியாதல் [illegible] [illegible] சம்போகம் செய்வது இவைகள் [illegible] ஸ்திரங்கள். தபஸ், தானம், கபடமின்மை கொல்லா மை, உண்மைபேசுதல் இவைகள் தக்ஷிணை. யாகம் செய்யப்போகும்போது ஸோ ஷ்யதி என்று சொல்வதுபோல் தாயாரால் இவன் உத்பாதனம் செய்யப்படும்போது [illegible] ஸோஷ்யதி என்று சொல்வதாலும், யாகஞ்செய்து முடிந்தபின்பு அஸோஷ்ட என்று சொல்வதுபோல் இவன் ஜனித்தபின்பு அஸோஷ்ட மாதா என்று சொல்வ தாலும் இவன் யாகமென்னத்தடையில்லை. இவன் மரணமடைவது அவப்ருதயாம்.

தத்தைதத்கோர ஆங்கிரஸ: க்ருஷ்ணாய தேவகீபுத்ராயோக்த்வோவாச

அபிபாஸ ஏவ ஸ பபூவ ஸோऽந்தவேலாயாமேதத்த்ரயம் ப்ரதிபத்யேத

அக்ஷிதமஸ்யச்யுதமஸி ப்ராணஸம்ஶிதமஸீதி தத்ரைதே த்வே ருசௌ பவத: ||௬||

ஸ0-ரா—பொது அர்த்தம்-இவ்வித்யையை உபாசிப்பவன், 'அக்ஷிதமஸி', 'அச்யுதமஸி' 'ப்ராணஸம்ஶிதமஸி' என்கிற மூன்று யஜுர் மந்திரங்களை மரணகாலத்தில் ஜபிக்கவேண்டியது. ப்ரும்மமே! நீ நாசமில்லாதவன் ஸ்வரூபம் ஸ்வபாவம் இவைகளில் எவ்வித குறைவு மடையப்பட்டவனன்று. ஜகத்தையெல்லாம் ஜீவிக்கச்செய்யும் ஸூக்ஷ்மதத்வமாயிருக்கிறாய், என்பது அம்மந்திரங்களின் பொருள். தத்ர—இவ்வித்தையின் விஷயத்தில், ருச்—அந்த பரப்ரும்ம விஷயத்தில், இரண்டிருக்கும் மந்திரங்கள் உண்டு.

ஆதித்ப்ரத்னஸ்ய ரேதஸ: உத்வயம் தமஸஸ்பரி ஜ்யோதி: பஶ்யந்த உத்தரம்

ஸ்வ: பஶ்யந்த உத்தரம் தேவம் தேவத்ரா ஸூர்யமகன்ம ஜ்யோதி-

ருத்தமமிதி ஜ்யோதிருத்தமமிதி ||௭||

ஸ—இஜ்ஜகத்துக்கெல்லாம் காரணபூதமாய் ஸர்வவ்யாபியாயும் ஜ்யோதிஸ்ஸ்வரூபமாயும் ஸ்வயம் ப்ரகாசமாயுமுள்ள பரப்ரும்மத்தை விதையவாசனை நல்லோர் மகான்கள் காண்பார்கள்.

ரா—அனாதியானதும் ஜகத்துக்குக் காரணமானதுமான ப்ருக்ருதிக்கும் ஆதியாயும் ஸம்ஸாரமென்னும் அந்தகாரத்தைப் போக்குகிற ஜ்யோதிஸ்ஸ்வரூபமாயும் நித்யப்ரகாசமாயும் பரமபதமென்னும் ஸ்தானத்தில் நிரதிசயமான தேஜஸ்ஸை உடைய திவ்யவிக்கிரஹத்தோடு கூடினதாயும் உள்ள பரப்ரும்மத்தை ஞானிகள் ஸர்வகாலமும் பார்க்கிறார்கள். இது முதல்மந்திரத்தின் அர்த்தம். மேல் இரண்டாவது மந்திரம்.

ஸ—ப்ரும்ம ஸாக்ஷாத்காரம் பெற்ற மஹரிஷி ஒருவன் சொல்லுகிறான். அஞ்ஞானமில்லாததும் அல்லது அஞ்ஞானத்தைப்போக்குவதும் ஸூர்யமண்டலத்திலிருப்பதுமான தேஜஸ்ஸும் இந்த தேகத்திலுள்ளிருக்கும் தேஜஸ்ஸும் பிரம்மமே. இரண்டும் ஒன்றே. ப்ரும்மஸ்வரூபமே. இதை அறிந்த நாம் உத்தீர்ணராகிறோம். அது எல்லாதேவதைகளிலும் மேலானது. ஸர்வோத்தமமானது. இந்த இரண்டு ருக்மந்திரங்களால் ஸ்துதிக்கப்படுவதும் கீழ் சொன்ன மூன்று யஜுர்மந்திரங்களால் ப்ரகாசிப்பிக்கப்பட்டதுமானது இந்த பிரம்மமேயாகும்.

ரா—ப்ரகிருதிமண்டலத்துக்கு வெளியில் உள்ள பரமபதமென்னும் பகவல்லோகத்தையும் அதில் உள்ள பரப்ரும்மத்தையும் கண்ணாரக்கண்டு களித்துக்கொண்டு அர்ச்சிராதி மார்க்கத்தின் படிகளில் ஒன்றாகிய ஸூர்யமண்டலத்தைத் தாண்டிப்போனோம். இது இரண்டாவது மந்திரத்தின் அர்த்தம்.

தாத்—இரண்டாவது முறை சொன்னது யாகமாகக்கல்பித்தது முடிந்ததைக் காட்டுகிறது.

அஷ்டாதச: கண்ட:

மனோ ப்ரஹ்மேத்யுபாஸீதேத்யத்யாத்மம் அதாதிதைவதமாகாஶோ

ப்ரஹ்மேத்யுபயமாதிஷ்டம் பவத்யத்யாத்மம் சாதிதைவதம் ச ||௧||

ஸ0-ரா-பா—ப்ராணன்களில் மனதும், தேவதைகளில் ஆகாசமும் ப்ரும்மமாக உபாசிக்கத்தக்கது. இரண்டு உபாசனமும் இதனால் சொல்லப்படுகிறது. (க)

தடேதச்சதுஷ்பாத் ப்ரஹ்ம வாக் பாத: ப்ராண: பாதஶ்சக்ஷு: பாத: ஶ்ரோத்ரம் பாத இத்யத்யாத்மமதாதிதைவதமக்நி: பாதோ வாயு: பாத ஆதித்ய: பாதோ திஶ: பாத இத்யுபயமேவாதிஷ்டம் பவத்யத்யாத்மம் சைவாதிதைவதம் ச ॥ ௨ ॥

ஸம்-தா-பா—மனஸ்ஸென்னும் பிரம்மத்திற்கு வாக்கு, ப்ராணன், கண், காது இவை நான்கும் நாலுபாதங்கள். ஆகாசமென்னும் பிரமமத்திற்கு அக்னி வாயு ஸூர்யன திக்குகள் இவை நான்கும் நாலுபாதங்கள். வாக்கு முதலியதுகள் மனதினால் நியமிக்கத்தக்கவை ஆகையாலும் அக்னி முதலியவை ப்ரம்மரூபமான ஆகாசத்தின் மார்பில தொங்குவதுபோலிருப்பதாலும் இவைகள் கால்களாகச்சொல்லப்பட்டன.

வாகேவ ப்ரஹ்மணஶ்சதுர்த்த: பாத: ஸோऽக்நிநா ஜ்யோதிஷா பாதி ச தபதி ச பாதி ச தபதி ச கீர்த்யா யஶஸா ப்ரஹ்மவர்சஸேந ய ஏவம் வேத ॥ ௩ ॥ ப்ராண ஏவ ப்ரஹ்மணஶ்சதுர்த்த: பாத: ஸ வாயுநா ஜ்யோதிஷா பாதி ச தபதி ச பாதி ச தபதி ச கீர்த்யா யஶஸா ப்ரஹ்மவர்சஸேந ய ஏவம் வேத ॥ ௪ ॥ சக்ஷுரேவ ப்ரஹ்மணஶ்சதுர்த்த: பாத: ஸ ஆதித்யேந ஜ்யோதிஷா பாதி ச தபதி ச பாதி ச தபதி ச கீர்த்யா யஶஸா ப்ரஹ்மவர்சஸேந ய ஏவம் வேத ॥ ௫ ॥ ஶ்ரோத்ரமேவ ப்ரஹ்மணஶ்சதுர்த்த: பாத: ஸ திக்பிர்ஜ்யோதிஷா பாதி ச தபதி ச பாதி ச தபதி ச கீர்த்யா யஶஸா ப்ரஹ்மவர்சஸேந ய ஏவம் வேத ய ஏவம் வேத ॥ ௬ ॥

ஸம்-தா-பா—அத்யாத்மத்தில் (ப்ராணன்களில்) பிரம்மமாகச் சொல்லப்பட்ட மனதின் நாலுபாதங்களில் ஒன்றாகிய வாக்கானது அதிதைவதத்தில் (தேவதைகளில்) பிரம்மமாகச் சொல்லப்பட்ட ஆகாசத்தின் நாலுபாதங்களில் ஒன்றாகிய அக்கினியாலே ப்ரகாசிக்கிறது. வாக்குக்கு அதிஷ்டான தேவதை அக்னியாகையாலே. தன் கார்யத்தில் உத்ஸாஹத்தை அடைவதும் அதனாலேயே. வாயுவும் ப்ராணனும் ஒரு தத்வமாகையால் ப்ராணனென்னும் பாதமானது வாயுவினாலும், ஸூர்யன் கண்ணின் அதிஷ்டாதாவாகையால் கண்ணென்னும் பாதமானது ஸூர்யனாலும், திக்கின் தேவதைகள் காதிற்கு அதிஷ்டாதாக்களாகையால் காது திக்குக்களாலும் பிரகாசிக்கின்றன. தங்கள் தங்கள் கார்யங்களில் உத்ஸாஹத்தோடு ப்ரவர்த்திக்கிறன. இவ்வாறு அறிந்து உபாசிப்பவன் கீர்த்தி யசஸ் ப்ரம்மதேஜஸ்ஸு இவைகளால் பிரகாசிப்பன். தானத்தால் உண்டாவது கீர்த்தி. பராக்கிரமத்தால் உண்டாவது யசஸ்ஸு. தன் கார்யத்தில் உத்ஸாஹ முடையவனவன். (௩-௧௮-௫-௬)

ஏகோநவிம்ஶ: கண்ட:

ஆதித்யோ ப்ரஹ்மேத்யாதேஶஸ்தஸ்யோபவ்யாக்யாநமஸதேவேதமக்ர ஆஸீத் । தத்ஸதாஸீத்தத்ஸமபவத்ததாண்டம் நிரவர்த்தத தத்ஸம்வத்ஸரஸ்ய மாத்ராமஶயத தந்நிரபித்யத தே ஆண்டகபாலே ரஜதம் ச ஸுவர்ணம் சாபவதாம் ॥ ௧ ॥

ஸம்-தா-பா—ஸூர்யன் பிரம்மத்தின் பாதமென்று கீழே சொல்லப்பட்டது. அந்தஸூர்யனே பிரம்மமென்று இங்கு உபதேசிக்கப்படுகிறது. அது இங்கு உபபாதிக்கப்படுகிறது.—இந்த ஜகத்தானது ஸ்ருஷ்டிக்கு முன்னே நாமம் ரூபம் இவைமுதலிய வேறுபாடில்லாமலிருந்தது. பிறகு அது கொஞ்சம் நாமரூப கார்யங்களுக்கு

அபிமுகமாயிற்று. முதலில் விதைமுளைத்து கிரமமாய் பெரிதாவதுபோலே அல்பம் நாமரூபங்களைப்பெற்ற அது பெரிதாய் ஒருமுட்டையாக ஆயிற்று. அது ஒருவருஷ காலம அப்படியேயிருந்து பிறகு இரண்டாகப்பிளந்தது. ஒன்று வெள்ளியும் ஒன்று பொன்னுமாச்சுது.

𑌤𑌦𑍍𑌯𑌦𑍍𑌰𑌜𑌤𑌂 𑌸𑍇𑌯𑌂 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌯𑌤𑍍𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌂 𑌸𑌾 𑌦𑍍𑌯𑍌𑌰𑍍𑌯𑌜𑍍𑌜𑌰𑌾-
𑌯𑍁 𑌤𑍇 𑌪𑌰𑍍𑌵𑌤𑌾 𑌯𑌦𑍁𑌲𑍍𑌬𑌂 𑌸 𑌮𑍇𑌘𑍋 𑌨𑍀𑌹𑌾𑌰𑍋 𑌯𑌾 𑌧𑌮𑌨𑌯𑌸𑍍𑌤𑌾 𑌨𑌦𑍍𑌯𑍋
𑌯𑌦𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍇𑌯𑌮𑍁𑌦𑌕𑌂 𑌸 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌃 ॥௨॥

ஸா-ரா-பா—வெள்ளியான கபாலம் பூமிமுதலிய கீழ்உலகங்கள் பொன்கபாலம் ஸ்வர்க்கம்முதலிய மேல்உலகங்கள். அண்டம்பிளந்தபோது கர்ப்பத்தைச்சுற்றியிருந்த பெரும்நரம்புகள் மலைகள் ஆயின ஸூக்ஷ்மமான கர்ப்பவேஷ்டனம் மப்புபனிகளாயின ஜனித்ததின் நரம்புகள் நதிகளாயின. அஸ்தியிலிருந்த நீர் ஸமுத்ரமாயிஙியது. (௨)

𑌅𑌥 𑌯𑌤𑍍𑌤𑌦𑌜𑌾𑌯𑌤 𑌸𑍋𑌽𑌸𑌾𑌵𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌤𑌂 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌂 𑌘𑍋𑌷𑌾 𑌉𑌲𑍂-
𑌲𑌵𑍋𑌽𑌨𑍂𑌦𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌚 𑌕𑌾𑌮𑌾𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍
𑌤𑌸𑍍𑌯𑍋𑌦𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌯𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌘𑍋𑌷𑌾 𑌉𑌲𑍂𑌲𑌵𑍋𑌽𑌨𑍂𑌤𑍍𑌤𑌿-
𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌚 𑌕𑌾𑌮𑌾𑌃 ॥ ௩ ॥

ஸா-ரா-பா—அதிலிருந்து உண்டானவன் ஸூர்யன் அவன் உண்டாகும்போது பெரிய இரைச்சல்களோடு சப்தங்களும் ஸ்தாவரமும் ஜங்கமமுமான பூதங்களும் ஸ்திரீவஸ்திரம் முதலிய காமஜவஸ்துக்களும் கூடவே உண்டாயின. அதனால் தான் இப்போதும் ஸூர்யனது உதயாஸ்தமய காலங்களில் சப்தங்களும் (பக்ஷிகள் கூவுதலினால்) பூதங்களும் காமங்களும் உண்டாகின்றன. (௩)

𑌸 𑌯 𑌏𑌤𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌭𑍍𑌯𑌾-
𑌶𑍋 𑌹 𑌯𑌦𑍇𑌨𑌂 𑌸𑌾𑌧𑌵𑍋 𑌘𑍋𑌷𑌾 𑌆 𑌚 𑌗𑌚𑍍𑌛𑍇𑌯𑍁𑌰𑍁𑌪 𑌚 𑌨𑌿𑌮𑍍𑌰𑍇-
𑌡𑍇𑌰𑌨𑍍𑌨𑌿𑌮𑍍𑌰𑍇𑌡𑍇𑌰𑌨𑍍 ॥ ௪ ॥

ஸா-ரா-பா—இவ்வித மகிமையையுடைய ஸூர்யனை பிரம்மமாக உபாசிப்பவன் சீக்கிரத்தில் ஸமீபமாகவே மங்களமான சப்தங்களைக்கேட்டு ஸுகம்பெறுவான். இரண்டு தடவை (நிம்ரேடேரந்) என்றது அத்தியாயம் முடிந்ததைக்காட்டுகிறது.

சங்—இது திருஷ்டபலம். இவன் பிரம்மமாகவே ஆய்விடுகிறது ப்ரதானபலம்.

மூன்றும் ப்ரபாடகம் முற்றது.

𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑍀𑌯𑌛𑌾𑌨𑍍𑌦𑍋𑌗𑍍𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌿 - 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌃 𑌪𑍍𑌰𑌪𑌾𑌠𑌕𑌃,

𑌅𑌥 𑌪𑍍𑌰𑌥𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃.

𑌹𑌰𑌿𑌃 𑍐॥ 𑌜𑌾𑌨𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌰𑍍𑌹 𑌪𑍌𑌤𑍍𑌰𑌾𑌯𑌣𑌃 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌦𑍇𑌯𑍋 𑌬𑌹𑍁-
𑌦𑌾𑌯𑍀 𑌬𑌹𑍁𑌪𑌾𑌕𑍍𑌯 𑌆𑌸 𑌸 𑌹 𑌸𑌰𑍍𑌵𑌤 𑌆𑌵𑌸𑌥𑌾𑌨𑍍𑌮𑌾𑌪𑌯𑌾𑌂𑌚𑌕𑍍𑌰𑍇 𑌸𑌰𑍍𑌵𑌤
𑌏𑌵 𑌮𑍇𑌽𑌤𑍍𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑍀𑌤𑌿 ॥ ௧ ॥

ஸம்வர்க்கவித்யை சொல்லப்படுகிறது. அதன் பெருமைக்காக கதைசொல்லப்படுகிறது.

ஸ0-ரா—புத்ரர் என்பவரின் பேரனாகையாலே பௌத்ராயணரென்றும் ஜநச்ருதர் என்பவரின் புத்ரராகையாலே ஜாநச்ருதி யென்றும் பிரசித்தரான அரசனொருவன் வெகுதார்மிகனாயும் ச்ரத்தையோடு தானம் செய்பவனாயும் அன்னம் போடுகிறவனாயும் இருந்தான். எல்லாவிடத்திலும் எல்லாரும் தன் அன்னத்தையே புசிக்கவேண்டுமென்று ஆசைகொண்டு எல்லாவிடங்களிலும் தர்மசத்திரங்கள் கட்டிவைத்து வழிப்போக்கர்களுக்கு வேண்டிய ஸகல உபசாரணைகளும் செய்வித்தான்.

அத ஹ ஹம்ஸா நிஶாயாமதிபேது: தத்தைவம் ஹம்ஸோ ஹம்ஸமப்யுவாத ஹோ ஹோயி பல்லாக்ஷ பல்லாக்ஷ ஜாநஶ்ருதே: பௌத்ராயணஸ்ய ஸமம் திவா ஜ்யோதிராததம் தந்மா ப்ரஸாங்க்ஷீஸ்தத்த்வா மா ப்ரதாக்ஷீரிதி || ௨ ||

ஸ0-ரா—இவ்வாறு இவ்வரசன் தர்மத்திலேயே கருத்துடையவனாய் பிரம்மக்கியானத்தில் பிரவ்ருத்தி இல்லாதிருப்பதைக்கண்ட சிலதேவதைகள் இவனுக்கு புத்தி உண்டாக்கவேண்டி இவன் மாளிகைமேல் உப்பரிகையில் படுத்திருக்கும் சமயத்தில் ஹம்ஸரூபத்தைக்கொண்டு ஆகாயத்தில் ஸஞ்சரித்தன. அவைகளில் முன்னே வேகமாய்ப்போகும் ஓர் ஹம்ஸத்தை நோக்கி பின்னேவரும் மற்றொரு ஹம்ஸம் அடே தூர திருஷ்டி யில்லாதவனே. பார் பார். ஜாநச்ருதியின் தேஜஸ்ஸானது ஸ்வர்க்கம் வரையில் பரவியிருக்கிறது, நீ அதை நெருங்கிப்போகாதே. அது உன்னைக்கொளுத்திவிடப் போகிறது, என்று சொல்லிற்று.

தமு ஹ பர: ப்ரத்யுவாச கம்வர ஏநமேதத்ஸந்தம் ஸயுக்வாநமிவ ரைக்வமாத்தேதி யோ நு கதம் ஸயுக்வா ரைக்வ இதி || ௩ ||

ஸ0-ரா—இதைக்கேட்ட முன் செல்லும்ஹம்ஸமானது அடே, நீ என்ன சொல்லுகிறாய், இவருக்கு என்ன அதிசயம் உண்டு, நீ ஏதோ இவரை வண்டியோடிருக்கும் ரைக்வரைப்போல் நினைக்கிறாயே, என்றது. அவர் யார் ரைக்வர், அவர் எப்படிப்பட்டவர், என்று மற்றையது கேட்டது.

யதா க்ருதாய விஜிதாயாதரேயா: ஸம்யந்த்யேவமேநம் ஸர்வம் ததபிஸமேதி யத்கிஞ்ச ப்ரஜா: ஸாது குர்வந்தி யஸ்தத்வேத யத்ஸ வேத ஸ மயைதது க்த இதி || ௪ ||

ஸ0-ரா—சூதாட்டத்தில். 1-2-3-4 எண்கள் உள்ள சில ஆட்டஸங்கேதங்கள் உண்டு அதில் நாலு எண் உள்ளதில் ஒருவன் ஜயித்துவிட்டால். 3-2-1. எண்கள் அதிலடங்கியிருப்பதால் இவன் அவைகளையெல்லாம் ஜயித்தவனென்பது அவ்வாட்டத்தின் ஸங்கேதம். அதுபோல இவ்வுலகத்தில் எவன் எவன் எந்த நற்கருமம் செய்தாலும் அதெல்லாம் இவரது நற்கருமத்தில் அடங்கியது உலகத்தில் உள்ளவர்களின் கியானமெல்லாம் இவர் கியானத்தில் அடங்கியது. அவர்தாம் ரைக்வர். அவரைத்தான் நான் சொன்னேன் என்று அந்த ஹம்ஸம் சொல்லிற்று.

தது ஹ ஜாநஶ்ருதி: பௌத்ராயண உபஶுஶ்ராவ ஸ ஹ ஸஞ்ஜிஹாந ஏவ க்ஷத்தாரமுவாசாங்காரே ஹ ஸயுக்வாநமிவ ரைக்வமாத்தேதி யோ நு கதம் ஸயுக்வா ரைக்வ இதி || ௫ || யதா க்ருதாய விஜிதாயாதரேயா: ஸம்யந்த்யேவமேநம் ஸர்வம் ததபிஸமேதி யத்கிஞ்ச ப்ரஜா: ஸாது குர்வந்தி யஸ்தத்வேத யத்ஸ வேத ஸ மயைதது க்த இதி || ௬ ||

ஸ ஹ க்ஷத்தாந்விஷ்ய நாவிதமிதி ப்ரத்யேயாய தம் ஹோவாச
யத்ராரே ப்ராஹ்மணஸ்யாந்வேஷணா ததேநமர்ச்சேதி ॥ ௭ ॥

ஸோ(அ)தஸ்தாச்சகடஸ்ய பாமாநம் கஷமாணமுபோபவிவேச தம்
ஹாப்யுவாத த்வம் நு பகவ: ஸயுக்வா ரைக்வ இதி அஹம் ஹ்யரா௩ இதி
ஹ ப்ரதிஜஜ்ஞே ஸ ஹ க்ஷத்தா(அ)விதமிதி ப்ரத்யேயாய ॥ ௮ ॥

ஸா-ர—இதைக்கேட்ட ஜாநச்ருதி ப்ரம்மக்கியானமே மேலானதென்றறிந்து கொண்டு மனவருத்தத்துடனே உதயமாவதை யெதிர்பார்த்திருந்து படுக்கையை விட்டெழுந்த உடனே தன் வேலைக்காரனைக்கூப்பிட்டு ரைக்வரிருக்குமிடத்தை அறிந்துவரும்படி கட்டளையிட்டார். ரைக்வர் எப்படிப்பட்டவர் என்று அவன் கேட்டான் ஹம்ஸம் சொன்னதை அவனுக்குச்சொன்னால். அவன் தேடிப்பார்த்து அகப்படவில்லையென்று சொன்னான். பிரும்மக்கியானிகள் வாஸஞ்செய்யும் மாஸசாரி ஆறு முதலிய இடங்களில் தேடிப்பார் என்று மறுபடி அரசன் உத்திரவு செய்தார். அப்படியே அவன் தேடிவரும்போது வண்டியின் கீழ்உட்கார்ந்து சொரிசலைச்சொரிந்து கொண்டிருக்கும் அவரைக்கண்டு விநயத்தோடு கிட்டச்சென்று தாம்தான் ரைக்வரோ என்றுகேட்டான். அவர் 'ஆமடா', என்று சொன்னார். அவன் திரும்பிவந்து அவரிருப்பிடத்தை அறிந்துவந்தேனென்று அரசனுக்குச்சொன்னான்.

* த்விதீய: கண்ட:. *

ததுஹ ஜாநச்ருதி: பௌத்ராயண: ஷட்சதாநி கவாம் நிஷ்கமச்வ
தரீரதம் ததாதாய ப்ரதிசக்ரமே தம் ஹாப்யுவாத ॥ ௧ ॥

ரைக்வேமாநி ஷட்சதாநி கவாமயம் நிஷ்கோ(அ)யமச்வதரீரதோ(அ)நு ம
ஏதாம் பகவோ தேவதாம் சாதி யாம் தேவதாமுபாஸ்ஸ இதி ॥ ௨ ॥

ஸா-ர—பின் அரசன் அறுநூறு பசுக்களையும் கண்டத்திற்கு ஆரத்தையும் கோவேறுகழுதை கட்டிய ரதத்தையும் கூடக்கொண்டுபோய் ரைக்வரை ஸேவித்து இவைகளை ஏற்றுக்கொண்டு தாம் உபாசிக்கும் தேவதையை எனக்கு உபதேசிக்கவே என்று பிரார்த்தித்தார்.

தமு ஹ பர: ப்ரத்யுவாசாஹ ஹாரே த்வா சூத்ர தவைவ ஸஹ
கோபிரஸ்த்விதி ததுஹ புநரேவ ஜாநச்ருதி: பௌத்ராயண: ஸஹ
ஸ்ரம் கவாம் நிஷ்கமச்வதரீரதம் துஹிதரம் ததாதாய ப்ரதிசக்ரமே ॥ ௩ ॥

தம் ஹாப்யுவாத ரைக்வேதம் ஸஹஸ்ரம் கவாமயம் நிஷ்கோ(அ)ய
மச்வதரீரத இயம் ஜாயா(அ)யம் க்ராமோ யஸ்மிந்நாஸ்ஸே(அ)ந்வேவ மா பகவ: சாதீதி ॥

ஸா-ர—அடசூத்ரனே இவைகளை நீயே வைத்துக்கொள் என்று ரைக்வர் சொன்னார். மறுபடி அரசன் ஆயிரம் பசுக்களை விலையுயர்ந்த ஹாரம் உயர்ந்தரதம் தன் பெண் இவைகளைக்கொண்டு ரைக்வரிடம்கொடுத்து தாம் இப்போது வாஸஞ்செய்யும் கிராமத்தையும், தாம் ஸ்திரவாஸம் செய்ய நினைக்கிறதோ அந்த கிராமத்தையும் தம்முடையதாகச் செய்கிறேன் இவளைத்தாம் பத்னியாகக்கிரஹித்துக் கொள்வதோடு இப்பொருள்களையும் அங்கீகரித்துக்கொண்டு எனக்கு பிரம்மவித்யையை உபதேசிக்கவேண்டுமென்று கேட்டான்.

விசேஷார்த்தம் இருக்க இடமும் வீடும் பத்னியும் இல்லாத எனக்குப்பசுபணம் தேரிவை யெதற்கெனபதும் சிரகாலம் குருசுச்ருஷையாவது அதிகமானதனமானதில்லாமல் பிரும்மவித்யையை உபதேசிக்கக்கூடாதெனபதும் ரைக்வர் மறுத்தத்தி

ற்குக்காரணம் அரசனை சூத்ரனென்பது பிரம்மவித்யையில்லையேயென்று தான் சோகமடைந்ததினாலே. அல்லது நாலாம்வருணமென்ற தன்று மேல் கண்டத்திலும் இப்படியே.

தஸ்யா ஹ முக²முபோத்³க்³ருஹ்ணந்நுவாசாஜஹாரேமா: ஶூத்³ராநேநைவ முகே²நாலாபயிஷ்யதா² இதி தே ஹைதே ரைக்வபர்ணா நாம மஹாவ்ருஷேஷு யத்ராஸ்மா உவாஸ தஸ்மை ஹோவாச ॥ ரு ॥

ஸா-ரா—இந்த கன்னிகையைக்கொடுத்ததினால் வித்யையை உபதேசிக்கவேண்டியதாகிறதென்று நிச்சயித்து-ரங் - தக்கஉபஹாரம் கொடுத்ததினால் அங்கீகரிக்கிறேனென்று சொல்லி மேல் பொதுதாத்—சூத்ரனே நீ இவைகளைக்கொடுத்ததினால் இவ்வழியாலே உனக்கு நான் பிரம்மவித்யையை உபதேசிக்கிறேனென்று ரைக்வர் சொன்னார். மஹாவ்ருஷம் என்னும் தேசத்தில் ஐவாவாசம் செய்த இடமான ரைக்வபர்ணம் என்னும் கிராமத்தை ராஜா அவருக்குக்கொடுத்தான் அவர் தன் உபாஸ்ய தேவதையை அவனுக்கு உபதேசித்தார்.

அத² த்ருதீய: க²ண்ட³:.

வாயுர்வாவ ஸம்வர்கோ³ யதா³ வா அக்³நிருத்³வாயதி வாயுமேவாப்யேதி யதா³ ஸூர்யோऽஸ்தமேதி வாயுமேவாப்யேதி யதா³ சந்த்³ரோऽஸ்தமேதி வாயுமேவாப்யேதி ॥ க ॥

யதா³ப உச்சு²ஷ்யந்தி வாயுமேவாபியந்தி வாயுர்ஹ்யேவைதாந்ஸர்வாந்ஸம்வ்ருங்க்த இத்யதி⁴தை³வதம் ॥ உ ॥

ஸா-ரா—எல்லாவற்றையும் ஒன்றாக்கியெடுத்துக்கொள்வதுஅல்லதுலயமடைவிப்பது என்னும் குணமுடையதாகையாலே வாயுவே ஸம்வர்க்கம் அக்னி அணையும்போதும் ஸூர்யன் சந்திரன் இவர்கள் அஸ்தமிக்கும்போதும் ஜலங்கள் உலரும்போதும் இவையெல்லாம் வாயுவையே யடைகின்றன. இவையெல்லாவற்றையும் ஒன்றாக்கி க்ரஸித்துக்கொள்வதால் வாயுஸம்வர்க்கமென்று உபாசிப்பது. தேவதைகளில் வாயுஸம்வர்க்கம்.

ரா—வாயுவின் அந்தர்யாமியான பகவானை ஸம்வர்க்கமென்று உபாசிக்கக்கடவது.

அதா²த்⁴யாத்மம் ப்ராணோ வாவ ஸம்வர்க³: ஸ யதா³ ஸ்வபிதி ப்ராணமேவ வாக³ப்யேதி ப்ராணம் சக்ஷு: ப்ராணம் ஶ்ரோத்ரம் ப்ராணம் மந: ப்ராணோ ஹ்யேவைதாந்ஸர்வாந்ஸம்வ்ருங்க்த இதி ॥ ங ॥ தௌ வா ஏதௌ த்³வௌ ஸம்வர்கௌ³ வாயுரேவ தே³வேஷு ப்ராண: ப்ராணேஷு ॥ ச ॥

ஸா-ரா—ஆத்மாவில் ப்ராணனே ஸம்வர்க்கம் ஜீவன் தூங்கும்போது வாக்கு கண் காது மனம் இவையெல்லாம் ப்ராணனையே யடைகிறன இதையெல்லாவற்றையெல்லாம் ஒன்றாக்கிக்கிரஹிக்கிறது. இங்கும் பிராணனென்றது ப்ராணனின் அந்தர்யாமியான பகவானை தேவதைகளில் வாயுவும் ப்ராணன்களில் பிராணனும் இரண்டுமே ஸம்வர்க்கம்.

𑌅𑌥 𑌹 𑌶𑍌𑌨𑌕𑌂 𑌚 𑌕𑌾𑌪𑍇𑌯𑌮𑌭𑌿𑌪𑍍𑌰𑌤𑌾𑌰𑌿𑌣𑌂 𑌚 𑌕𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑌿𑌂 𑌪𑌰𑌿
𑌵𑌿𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑍌 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑍀 𑌬𑌿𑌭𑌿𑌕𑍍𑌷𑍇 𑌤𑌸𑍍𑌮𑌾 𑌉 𑌹 𑌨 𑌦𑌦𑌤𑍁𑌃 ॥ ௫ ॥

தாத்—கபிகோத்ரத்தவரும் சுநகமுனியின் குமாரருமான சௌனகமுனியும் கக்ஷஸேனரின் புத்ரரான அபிப்ரதாரி முனியும் போஜனம் செய்துகொண்டிருக்கும்போது ஸம்வர்க்கோபாஸனம் செய்யும் பிரம்மசாரி ஒருவன்வந்து பிக்ஷைகேட்டான். அவனது பிரம்மக்ஞானம் இவ்வளவென்பதைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று நினைத்து அவனுக்கு பிக்ஷைபோடாமலிருந்தார்கள்.

ஸ௦-ரா-பா—இவ்விரண்டு ஸம்வர்க்கங்களின் ஸ்துதிக்காக, ரக-ஸம்வர்க்கவித்யையின் ஸ்துதிக்காக, இந்த கதை ஆரம்பிக்கப்படுகிறது. (௫)

𑌸 𑌹𑍋𑌵𑌾𑌚 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍋 𑌦𑍇𑌵 𑌏𑌕𑌃 𑌕𑌃 𑌸 𑌜𑌗𑌾𑌰 𑌭𑍁
𑌵𑌨𑌸𑍍𑌯 𑌗𑍋𑌪𑌾𑌃 । 𑌤𑌂 𑌕𑌾𑌪𑍇𑌯 𑌨𑌾𑌭𑌿𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌾 𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑌤𑌾𑌰𑌿𑌨𑍍
𑌬𑌹𑍁𑌧𑌾 𑌵𑌸𑌨𑍍𑌤𑌂 । 𑌯𑌸𑍍𑌮𑍈 𑌵𑌾 𑌏𑌤𑌦𑌨𑍍𑌨𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾 𑌏𑌤𑌨𑍍𑌨 𑌦𑌤𑍍𑌤𑌮𑌿𑌤𑌿 ॥ ௬ ॥

ஸ௦-ரா-பா—தேவதைகளில், அக்னி சூர்யன் சந்திரன் ஜலம் இவைகளையும் ப்ராணன்களில் வாக்கு கண் காது மனம் இவைகளையும் எல்லாலோகங்களையும் ரக்ஷிக்கும் ப்ரம்மாவே வாயுரூபத்தோடும் ப்ராணரூபத்தோடும் ஸம்ஹரிக்கிறது. இவ்விஷயத்தை ஸம்ஸாரிகள் அறியவில்லை. இந்த ஜகத்தெல்லாம் அந்த ஸம்வர்க்க ப்ரஜாபதிக்கன்னமாயிருக்கிறது. அது பிக்ஷைகேட்டால் யாரும் கொடுக்கவில்லையே யென்று அந்த பிரமசாரி சொன்னான். ஆத்மபோதம். ரங்—உபாசனையின் திடத்தினால் உபாசனம் செய்யும் தனக்கு பிக்ஷைகொடுக்கப்படாததையே தன் உபாஸ்ய தேவதைக்குக் கொடுக்கப் படாததாகச் [illegible]

𑌤𑌦𑍁 𑌹 𑌶𑍌𑌨𑌕𑌃 𑌕𑌾𑌪𑍇𑌯𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌨𑍍𑌵𑌾𑌨𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌯𑌾𑌯𑌾𑌤𑍍𑌮𑌾
𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌜𑌨𑌿𑌤𑌾 𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌂 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑍋 𑌬𑌭𑌸𑍋𑌽𑌨
𑌸𑍂𑌰𑌿𑌰𑍍𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌮𑌸𑍍𑌯 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌮𑌾𑌹𑍁𑌰𑌨𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑍋 𑌯𑌦𑌨𑌨𑍍𑌨𑌮𑌤𑍍𑌤𑍀𑌤𑌿 𑌵𑍈
𑌵𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑌿𑌨𑍍𑌨𑍇𑌦𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌮𑌹𑍇 𑌦𑌤𑍍𑌤𑌾𑌸𑍍𑌮𑍈 𑌭𑌿𑌕𑍍𑌷𑌾𑌮𑌿𑌤𑌿 । ௭ ॥

ஸ௦-ரா-பா—இப்படி ப்ரம்மசாரிசொன்னதைக்கேட்ட சௌனகர் மனதில் ஆலோசித்துக்கொண்டே அவனிடம் வந்து, ஓ, பிரமசாரியே! தேவதைகளுக்கு நியந்தாவும், அழகிய பல்லைத் தரித்தவனும், ஸம்ஹாரம் செய்த கோரைப்பல்லையுடையவரும் அசுரர்களை ஸம்ஹாரம் செய்பவரும் புத்திமானும் ஆகிய ந்ருஸிம்மனது மகிமைபெருதல்பமென்று முன்னோர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்வேறொன்றினாலும் ஸம்ஹரிக்கத்தக்கவரல்லர். அவரே யெல்லாவற்றையும் ஸம்ஹரிப்பவர். அவரையே யாம் ஸம்வர்க்கமாக உபாசிக்கிறோம். நீ ஸம்வர்க்கவித்யையின் தத்வத்தை அறிந்தாயில்லை என்று சொல்லி, 'இவனுக்கு பிக்ஷைபோடுங்கள் என்று தன்வேலைக்காரர்களுக்கு ஆக்ஞாபித்தார்.

𑌤𑌸𑍍𑌮𑌾 𑌉 𑌹 𑌦𑌦𑍁𑌸𑍍𑌤𑍇 𑌵𑌾 𑌏𑌤𑍇 𑌪𑌞𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑍇 𑌪𑌞𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑍇 𑌦𑌶 𑌸𑌨𑍍𑌤
𑌸𑍍𑌤𑌤𑍍𑌕𑍃𑌤𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍁 𑌦𑌿𑌕𑍍𑌷𑍍𑌵𑌨𑍍𑌨𑌮𑍇𑌵 𑌦𑌶 𑌕𑍃𑌤𑌂 𑌸𑍈𑌷𑌾 𑌵𑌿𑌰𑌾𑌡𑌨𑍍𑌨𑌾𑌦𑍀
𑌤𑌯𑍇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌸𑍍𑌯𑍇𑌦𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌂 𑌭𑌵𑌤𑍍𑌯𑌨𑍍𑌨𑌾𑌦𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌯
𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦 ॥

ஸ௦-ரா-பா— அவனுக்கு பிக்ஷைபோட்டார்கள் ஸம்வர்க்கவித்யையின் ஸ்துதிக்காக அதன் பதார்த்தங்களை க்ருதாயமாகவும் விராட்டாகவும் அன்னமாகவும் அன்னாதியாகவும் ஸ்துதிசெய்கிறது.

தேவதைகளில் ஸம்ஹாரம்செய்யப்படும் அக்னி சூர்யன் சந்திரன் ஜலம் இவை நான்கும் ஸம்ஹாரம் செய்யும்வாயுவும், ப்ராணன்களில ஸம்ஹாரம் செய்யப்படும் வாக்கு கண் காது மனது நாலும் ஸம்ஹாரம் செய்யும் ப்ராணனும். ஆகிய பத்தும் க்ருதாயமாம். ஒன்று இரண்டு மூன்று நான்கு என்னும எண்ணைங்கள் கொண்டது க்ருதாயம். இவைகளைக்கூட்டினுல் பத்தாகிறதல்லவா. இப்பத்தும் பத்துதிக்கிலும் இருப்பதால் இதுவிராட், இதுவே அன்னம். 'தசாக்ஷராவிராட் அன்னம்' விராட்! என்று சுருதி கூறுகிறது. விராட்சந்தஸ்ஸபத்தக்ஷரம். க்ருத மென்றும் அயத்தில் பத்தென்றும் எண் புஜிக்கப்படுவது போல் உள்ளடங்கியிருப்பதாலும், பத்து என்றும் கணக்கு விராட்டாகையாலும் விராட்டே அன்னமாகையாலும் இது அன்னாதியுமாம். இப்படி விராட்டை உபாசிப்பதால் பத்து திக்கிலுள்ள வஸ்துக்களும் உபாசிக்கப்பட்டதாக ஆகிறது. இந்த ஸம்மவ உபாஸிப்பவன் ஸர்வஞ்ஞனய் ப்ரம்மத்தை அனுபவிக்கப் பெறுவன் யஏவம் வேத, என்றுமறுபடியும் சொன்னது வித்யை முடிந்ததைக் காட்டுகிறது. (௮)

अथ चतुर्थः खण्डः.

सत्यकामो ह जाबालो जबालां मातरमामन्त्रयांचक्रे ब्रह्मचर्यं भवति विवत्स्यामि किंगोत्रो न्वहमस्मीति ॥ ௧ ॥

ஸா—ஜகத்தைப் பதினாறாக பாகம் செய்து அதைப்ரம்மமாக பாவிக்கும்படி இங்கு உபதேசிக்கப்படுகிறது. சிரத்தையும் தபஸ்ஸும் உபாசனத்துக்கு அங்கமென்று காட்டுகைக்காக க்கதை சொல்லப்படுகிறது.

ரா—ஷோட சகலப்ரம்மவித்யை சொல்லப்படுகிறது.

தாத்—ஜபாலை யென்னும் பதிவ்ரதையின் புதரனுன் ஸத்யகாமனென்பவர் அம்மா! வேதாத்யயனம் செய்வதற்காக குருகுலத்தில் ப்ரும்மசாரியாய் வாஸம் செய்யவிரும்பி யிருக்கிறேன். உபனயனத்துக்குக் கோத்ரம் தெரியவேண்டுமே, என் கோத்ரமெது, என்று தன்தாயாரைக்கேட்டார்.

सा हैनमुवाच नाहमेतद्वेद तात यद्गोत्रस्त्वमसि बह्वहं चरन्ती परिचारिणी यौवने त्वामलभे साहमेतन्न वेद यद्गोत्रस्त्वमसि जबाला तु नामाहमस्मि सत्यकामो नाम त्वमसि स सत्यकाम एव जाबालो ब्रुवीथा इति ॥ ௨ ॥

ப0-ரா—குழந்தாய், நான் அதிதிபூஜையிலேயே கருத்தாயிருந்தேன், யௌவனத்திலேயே உன்னைப்பெற்றேன், கோத்ரமிது வென்பதெனக்குத் தெரியாது. என்பேர் ஜபாலை, உன்பேர் ஸத்யகாமன், குருகேட்டால் ஜாபாலயின் புத்திரன் ஸத்யகாமன் என்றே சொல் என்று தாயார் அவனுக்குப்பதில் சொன்னுள்.

स ह हारिद्रुमतं गौतममेत्योवाच ब्रह्मचर्यं भगवति वत्स्याम्युपेयां भगवन्तमिति ॥ ௩ ॥

ப0-ரா—அவர் கௌதமகோத்திரத்தில் பிறந்த ஹரித்ருமதத் தென்பவரின் புத்ரரான ஸ்ரீத்ருமதரிடம் வந்து யான் தமக்கு சிஷ்யனுய் வந்திருக்கிறேன், ப்ரம்மசாரியாய் குருகுல வாஸம் செய்கிறேனென்று சொன்னா.

तं होवाच किंगोत्रो नु सोम्यासीति स होवाच नाहमेतद्वेद भो यद्गोत्रोऽहमस्म्यपृच्छं मातरं सा मा

𑌤𑍍𑌯𑌬𑍍𑌰𑌵𑍀𑌦𑍍𑌬𑌹𑍍𑌵𑌹𑌂 𑌚𑌰𑌨𑍍𑌤𑍀 𑌪𑌰𑌿𑌚𑌾𑌰𑌿𑌣𑍀 𑌯𑍌𑌵𑌨𑍇 𑌤𑍍𑌵𑌾𑌮𑌲𑌭𑍇 𑌸𑌾𑌹𑌮𑍇
𑌤𑌨𑍍𑌨𑌵𑍇𑌦𑌯𑌦𑍍𑌗𑍋𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿𑌜𑌬𑌾𑌲𑌾 𑌤𑍁 𑌨𑌾𑌮𑌾𑌹𑌮𑌸𑍍𑌮𑌿 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑍋 𑌨𑌾
𑌮 𑌤𑍍𑌵𑌮𑌸𑍀𑌤𑌿 𑌸𑍋𑌽𑌹𑌂 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑍋 𑌜𑌾𑌬𑌾𑌲𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌭𑍋 𑌇𑌤𑌿 ॥ ௪ ॥

ஸo-ரா—குழந்தாய்! உன் கோத்ரமென்னவென்று கௌதமரிகேட்டார். எனக்கு கோத்ரம் தெரியாது, என்தாயாரைக்கேட்டேன் தான் அதிதிபூஜையிலேயே கருத்தாயிருந்ததால் கோத்ரம் இன்னதென்று தெரிந்து கொள்ள வில்லையென்றும் யௌவனத்திலேயே யென்னைப்பெற்றபடியால் வெட்கத்தினால் என் பிதாவைக்கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை யென்றும் குருகேட்டால் ஜபாலையின் புத்ரன ஸத்யகாமன் என்று சொல் என்றும் என்தாயார் சொன்னாள். ஆதலால் நான் ஜபாலையின் ஸத்யகாமன், என்னை அங்கீகரிக்கவேணுமென்று அவர் சொன்னார். (௪)

𑌤𑌂 𑌹𑍋𑌵𑌾𑌚 𑌨𑍈𑌤𑌦𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿 𑌸𑌮𑌿𑌧𑌂 𑌸𑍋𑌮𑍍𑌯𑌾
𑌹𑌰𑍋𑌪 𑌤𑍍𑌵𑌾 𑌨𑍇𑌷𑍍𑌯𑍇 𑌨 𑌸𑌤𑍍𑌯𑌾𑌦𑌗𑌾 𑌇𑌤𑌿 𑌤𑌮𑍁𑌪𑌨𑍀𑌯 𑌕𑍃𑌶𑌾
𑌨𑌾𑌮𑌬𑌲𑌾𑌨𑌾𑌂 𑌚𑌤𑍁𑌃𑌶𑌤𑌾 𑌗𑌾 𑌨𑌿𑌰𑌾𑌕𑍃𑌤𑍍𑌯𑍋𑌵𑌾𑌚𑍇𑌮𑌾𑌃 𑌸𑍋𑌮𑍍𑌯𑌾𑌨𑍁
𑌸𑌂𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑌿 𑌤𑌾 𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌨𑍍𑌨𑍁𑌵𑌾𑌚 𑌨𑌾𑌸𑌹𑌸𑍍𑌰𑌣𑌾𑌵𑌰𑍍𑌤𑍇
𑌯𑍇𑌤𑌿 𑌸 𑌹 𑌵𑌰𑍍𑌷𑌗𑌣𑌂 𑌪𑍍𑌰𑍋𑌵𑌾𑌸 𑌤𑌾 𑌯𑌦𑌾 𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌸𑌂𑌪𑍇𑌦𑍁𑌃

ஸo-ரா—ப்ராம்மணனல்லாதவர்கள் இவ்வாறு கபடமற்று வார்த்தை சொல்ல மாட்டார்கள். நீ உண்மைசொன்னதால் ஸந்தோஷித்தேன் ஸமித்துக்கள் கொண்டுவா, உனக்கு உபநயனம் செய்கிறேனென்று சொல்லி முறைப்படி அவருக்கு உபநயனம்செய்து இளைத்துமெலிந்திருந்த பசுக்கூட்டங்களில் மிகவும் துர்ப்பலமான நானூர்பசுக்களை ஒட்டிக்கொடுத்து இதை மேய்த்துக் காப்பாற்றிக்கொண்டுவா என்று ஆக்கியாபித்தார். ஸத்யகாமா அவைகளை ஓட்டிக்கொண்டு போகும்போது இவைகள் ஆயிரம் கால்நடை களாவதற்குமுன் திரும்புவதில்லை யென்று பிரதிஜ்ஞைசெய்து புல்லும் ஜலமும் நிறைந்தகாட்டில் அவைகளை ஓட்டிக்கொண்டு போய் அவைகள் ஆயிரம் கால் நடைகள் ஆகும்வரையில் மேய்த்து வந்தான். (ரு)

𑌅𑌥 𑌪𑌞𑍍𑌚𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃.

𑌅𑌥 𑌹𑍈𑌨𑌮𑍃𑌷𑌭𑍋𑌽𑌭𑍍𑌯𑍁𑌵𑌾𑌦 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮 ௩ 𑌇𑌤𑌿 𑌭𑌗𑌵
𑌇𑌤𑌿 𑌹 𑌪𑍍𑌰𑌤𑌿𑌶𑍁𑌶𑍍𑌰𑌾𑌵 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾𑌃 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌸𑍍𑌮𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑌯 𑌨
𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌕𑍁𑌲𑌮𑍍 ॥ ௧ ॥ 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌶𑍍𑌚 𑌤𑍇 𑌪𑌾𑌦𑌂 𑌬𑍍𑌰𑌵𑌾𑌣𑍀𑌤𑌿 𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍁 𑌮𑍇
𑌭𑌗𑌵𑌾𑌨𑌿𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌹𑍋𑌵𑌾𑌚 𑌪𑍍𑌰𑌾𑌚𑍀 𑌦𑌿𑌕𑍍𑌕𑌲𑌾 𑌪𑍍𑌰𑌤𑍀𑌚𑍀 𑌦𑌿𑌕𑍍𑌕𑌲𑌾 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾
𑌦𑌿𑌕𑍍𑌕𑌲𑍋𑌦𑍀𑌚𑍀 𑌦𑌿𑌕𑍍𑌕𑌲𑍈𑌷 𑌵𑍈 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌚𑌤𑍁𑌷𑍍𑌕𑌲𑌃 𑌪𑌾𑌦𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃
𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌵𑌾𑌨𑍍𑌨𑌾𑌮 ॥ ௨ ॥ 𑌸 𑌯 𑌏𑌤𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌶𑍍𑌚𑌤𑍁𑌷𑍍𑌕𑌲𑌂 𑌪𑌾𑌦𑌂 𑌬𑍍𑌰
𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌵𑌾𑌨𑌿𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌵𑌾𑌨𑌸𑍍𑌮𑌿𑌁𑌲𑍍𑌲𑍋𑌕𑍇 𑌭𑌵𑌤𑌿
𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌵𑌤𑍋 𑌹 𑌲𑍋𑌕𑌾𑌞𑍍𑌜𑌯𑌤𑌿 𑌯 𑌏𑌤𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌶𑍍𑌚𑌤𑍁𑌷𑍍𑌕𑌲𑌂 𑌪𑌾
𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌵𑌾𑌨𑌿𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑍍𑌤𑍇 ॥ ௩ ॥

ஸo-ரா—மேல்போது—ஓஸத்யகாமா என்று அந்த ருஷபம் கூப்பிட்டது. ஸ்வாமி என்று ஸத்யகாமா சொன்னார். உன்பிரதிஞ்ஞைப்படி நாங்கள் ஆயிரம் கால்நடைகள்

ஆய்விட்டோம். எங்களை ஆசார்யன் வீட்டிற்கு ஓட்டிக்கொண்டுபோ. என்று ருஷபம் சொல்லிற்று. சங்—இவ்வாறு சிரத்தையோடும் தபஸ்ஸோடும் தமகுருரிய சர்ஸையை செய்யும் ஸத்யகாமன் விஷயத்தில் திக்குக்குரிய வாயுதேவதை ஸந்தோஷமடைந்து ருஷபத்தினிடத்தில் ஆவிர்ப்பவித்தது. ரா—இப்படி பசுக்களை ரக்ஷித்ததினால் ஒருமித்தமனதை ஸம்பாதித்து ருஷபத்தினிடத்தில் ஆவிர்ப்பவித்தது.

ஸம்-ரா—ப்ரம்மத்தின் கால்பாகத்தை நான் உனக்குச் சொல்லுகிறேன் என்று ருஷபம் சொல்லிற்று. சொல்லவேண்டுமென்று ஸத்யகாமர் கிழக்கு தெற்கு மேற்கு வடக்கென்றும் நாலுதிக்கும் ப்ரார்த்தியார நாலுகலைகள் இந்நாலுக்களை கொண்டது ப்ரம்மத்தின் ஒருபாகம் இதற்கு ப்ரகாசவத் என்று பெயர்.

ஸம்-ரா—இவ்வாறு அறிந்தவனும் கலைகளோடும் கூடிய ப்ரகாசவத்து என்னும் ப்ரம்மத்தின் பாதத்தை உபாஸிப்பவன் இவ்வுலகத்தில் ப்ரகாசத்தை (ப்ரஸித்தியை) அடைவதோடு ப்ரகாசமான பெரியலோகங்களையும் அடைவன். (௩)

ஷஷ்ட: கண்ட:

அக்நிஷ்டே பாதம் வக்தேதி ஸ ஹ ச்வோபூதே கா அபிப்ரஸ்தாபயாஞ்ச
கார தா யத்ராபி ஸாயம் பபூவுஸ்தத்ராக்நிமுபஸமாதாய கா உப
ருத்ய ஸமிதமாதாய பச்சாதக்நே: ப்ராங்ஙுபோபவிவேச ॥ க ॥

ஸம்-ரா-பா—அக்னி மற்றொரு பாதத்தைச் சொல்லுமென்று ருஷபம் சொல்லிற்று. ஸத்யகாமர் மறுநாள் மாடுகளை ஓட்டிக்கொண்டு புறப்பட்டார். ஸாயங்காலம் வந்தது. அம்மாடுகளை அடக்கி ஸந்த்யாவந்தனமும் சமிதாதானமும் செய்து அக்னிக்குப்பின்னால் கிழக்கு முகமாக ஸத்யகாமர் உட்கார்ந்தார். (௧)

தமக்நிரப்யுவாத ஸத்யகாம ௩ இதி பகவ இதி ஹ ப்ரதிசு
ச்ராவ ॥ ௨ ॥

ஸம்-ரா-பா—ஓ ஸத்யகாமா என்று அக்னி கூப்பிட்டது. ஸ்வாமியென்று ஸத்யகாமர் பதில் சொன்னார், (௨)

ப்ரஹ்மண: ஸோம்ய தே பாதம் ப்ரவாணீதி ப்ரவீது மே பகவாநி
தி தஸ்மை ஹோவாச ப்ருதிவீ கலாந்தரிக்ஷம் கலா த்யௌ: கலா ஸமு
த்ர: கலைஷ வை ஸோம்ய சதுஷ்கல: பாதோ ப்ரஹ்மணோऽநந்தவாந்நாம ॥ ௩ ॥

ஸம்-ரா-பா—ப்ரம்மத்தின் பாதத்தை (கால்பாகத்தை) நான் உனக்குச் சொல்லுகிறேனென்று அக்னி சொல்லிற்று. சொல்லவேண்டுமென்று ஸத்யகாமர் ப்ரார்த்தித்தார். பூமி ஆகாசம் ஸ்வர்க்கம் ஸமுத்ரம் இவை நான்கும் நாலு கலைகள் இந்நாலு கலைகொண்டது அனந்தவத் என்னும் பாதம். (௩)

ஸ ய ஏதமேவம் வித்வாம்ச்சதுஷ்கலம் பாதம் ப்ரஹ்மணோऽநந்தவா
நித்யுபாஸ்தேऽநந்தவாநஸ்மிம்ல்லோகே பவத்யநந்தவதோ ஹ லோகாஞ்ஜயதி
ய ஏதமேவம் வித்வாம்ச்சதுஷ்கலம் பாதம் ப்ரஹ்மணோऽந
ந்தவாநித்யுபாஸ்தே ॥ ௪ ॥

ஸம்-ரா-பா—இவ்வாறு அறிந்து இந்த அனந்தவத் என்னும் பாதத்தை உபாஸிப்பவன் இவ்வுலகில் நீடித்தவனாவான். சாச்வதமான லோகங்களையும் அடைவன். (௪)

ஸப்தம: கண்ட:.

ஸ ஹ ஶ்வோபூதே கா அபிப்ரஸ்தாபயாஞ்சகார தா யத்ராபிஸாயம் பபூவுஸ்தத்ராக்நிமுபஸமாதாய கா உபருத்ய ஸமிதமாதாய பஶ்சாதக்நே: ப்ராங்உபோபவிவேஶ || ௧ ||

ஸ௦-பா—மற்றொரு பாதத்தை ஹம்ஸம்சொல்லுமென்று அக்னிசொல்லிற்று மறுநாள் மாடுகளை ஓட்டிப்போய் ஸாயங்காலமானபோது மாடுகளைமடக்கி அங்கே ஸந்தியாவந்தனமும் ஸமிதாதானமும்செய்து அக்கினிக்குப்பின்னால் கிழக்குமுகமாக ஸத்யகாமர் உட்கார்ந்தார். (௧)

தம் ஹம்ஸ உபநிபத்யாப்யுவாத ஸத்யகாம ௩ இதி பகவ இதி ஹ ப்ரதிஶுஶ்ராவ || ௨ ||

ஸ௦-ரா-பா—ஹம்ஸம் ஒன்றுவந்து ஸத்யகாமா என்று கூப்பிட்டது. ஸ்வாமீ என்று ஸத்யகாமர் சொன்னார். அர்த்தம்போதும். ஸ௦-பா—இங்கு ஹம்ஸம் என்றது ஸூர்யன். (௨)

ப்ரஹ்மண: ஸோம்ய தே பாதம் ப்ரவாணீதி ப்ரவீது மே பகவாநிதி தஸ்மை ஹோவாசாக்நி: கலா ஸூர்ய: கலா சந்த்ர: கலா வித்யுத்கலைஷ வை ஸோம்ய சதுஷ்கல: பாதோ ப்ரஹ்மணோ ஜ்யோதிஷ்மாந்நாம || ௩ ||

ஸ௦-ரா-பா—ப்ரம்மத்தின் பாதமொன்றை நான் சொல்லுகிறேன் என்று ஹம்ஸம் சொல்லிற்று. சொல்லவேண்டுமென்று ஸத்யகாமர் ப்ரார்த்தித்தார். அக்னி ஸூர்யன் சந்த்ரன் மின்னல் இந்நான்கும் நாலுகலைகள். இக்கலை நாலும்கொண்ட பிரம்மத்தின பாதத்துக்கு ஜ்யோதிஷ்மத் என்று பெயர். (௩)

ஸ ய ஏதமேவம் வித்வாம்ஶ்சதுஷ்கலம் பாதம் ப்ரஹ்மணோ ஜ்யோதிஷ்மாநித்யுபாஸ்தே ஜ்யோதிஷ்மாநஸ்மிம்ல்லோகே பவதி ஜ்யோதிஷ்மதோ ஹ லோகாஞ்ஜயதி ய ஏதமேவம் வித்வாம்ஶ்சதுஷ்கலம் பாதம் ப்ரஹ்மணோ ஜ்யோதிஷ்மாநித்யுபாஸ்தே ||

ஸ௦-ரா-பா—இவ்வாறு ஜ்யோதிஷ்மத்தென்று இப்பாதத்தை உபாஸிப்பவன் தேஜஸ்ஸையு பெறுவதோடு அக்னி லோகம ஸூர்யலோகம் முதலிய ஜ்யோதிர் லோகங்களையும் அடைவன். (௪)

அஷ்டம: கண்ட:.

ஹம்ஸஸ்தே பாதம் வக்தேதி ஸ ஹ ஶ்வோபூதே கா அபிப்ரஸ்தாபயாஞ்சகார தா யத்ராபிஸாயம் பபூவுஸ்தத்ராக்நிமுபஸமாதாய கா உபருத்ய ஸமிதமாதாய பஶ்சாதக்நே: ப்ராங்உபோபவிவேஶ || ௧ ||

ஸ௦-ரா-பா—மத்குவென்னும் நீர்ப்பறவை மற்றொருபாதத்தைச் சொல்லுமென்று ஹம்ஸம் சொல்லிற்று. மறுநாள் முன்போல் ஸாயங்காலம் மாடுகளைமடக்கி ஸந்தியாவந்தனமும் ஸமிதாதானமும்செய்து அக்னிக்குப்பின்னால் கிழக்குமுகமாக ஸத்யகாமர் உட்கார்ந்தார். (௧)

தம் மத்குருபநிபத்யாப்யுவாத ஸத்யகாம இதி பகவ இதி ஹ ப்ரதிஶுஶ்ராவ ॥ ௨ ॥ ப்ரஹ்மண: ஸோம்ய தே பாதம் ப்ரவாணீதி ப்ரவீது மே பகவாநிதி தஸ்மை ஹோவாச ப்ராண: கலா சக்ஷு: கலா ஶ்ரோத்ரம் கலா மந: கலைஷ வை ஸோம்ய சதுஷ்கல: பாதோ ப்ரஹ்மண ஆயதநவாந்நாம ॥ ௩ ॥

ஸ0-ரா-பா...மக்கு ஒன்றுவந்து ஸத்யகாமாவென்று கூப்பிட்டது. ஸ்வாமீ என்று ஸத்யகாமர் பதில் சொன்னார். ப்ரம்மத்தின் பாதமொன்றை நான் சொல்லுகிறேனென்று மத்குசொல்லிற்று. சொல்லவேண்டுமென்று ஸத்யகாமர் ப்ரார்த்தித்தார். ப்ராணன் கண் காது மனது நாலுகலைகள். இந்நாலுகலைகள் கொண்ட பிரம்மத்தின் பாதத்துக்குஆயதனவத் என்று பெயர். (௩)

ஸ ய ஏதமேவம் வித்வாம்ஶ்சதுஷ்கலம் பாதம் ப்ரஹ்மண ஆயதநவாநித்யுபாஸ்த ஆயதநவாநஸ்மிம்ல்லோகே பவத்யாயதநவதோ ஹ லோகாஞ்ஜயதி ய ஏதமேவம் வித்வாம்ஶ்சதுஷ்கலம் பாதம் ப்ரஹ்மண ஆயதநவாநித்யுபாஸ்தே ॥ ௪ ॥

ஸ0-ரா-பா—இவ்வாறு அறிந்து இப்பாதத்தை ஆயதனவத்தென் றுபாஸிப்பவன் இவ்வுலகத்திய நல்ல ஆச்சர்யத்தைப்பெறுவதோடு அவகாசத்தோடு கூடிய லோகங்களையும் அடைவன். அர்த்தபோதம். ஸ0-பா—ஜலசம்பந்தமுடைய தாகையால் இங்கு ப்ராணனே மத்குவென்று சொல்லப்பட்டது. ரங்-பா—ஹம்ஸமும் மத்குவும் வ்ருஷபம்போலவே தேவதையின் ஆவேசத்தால் சொல்லிற்றுக்கள். (௪)

நவம: க2ண்ட:

ப்ராப ஹாசார்யகுலம் தமாசார்யோ(அ)ப்யுவாத ஸத்யகாம இதி பகவ இதி ஹ ப்ரதிஶுஶ்ராவ ॥ ௧ ॥

ஸ0-ரா-பா—ஸத்யகாமர் பசுக்களோடுகூட ஆசார்யரது கிருகம்போய்ச்சேர்ந்தார். கௌதமர் இவனைப்பார்த்து ஓ ஸத்யகாமா என்றார். ஸத்யகாமர் ஸ்வாமி என்றார். (௧)

ப்ரஹ்மவிதிவ வை ஸோம்ய பாஸி கோ நு த்வா(அ)நுஶஶாஸேத்யந்யே மநுஷ்யேப்ய இதி ஹ ப்ரதிஜஜ்ஞே பகவாம்ஸ்த்வேவ மே காமே ப்ரூயாத் ॥ ௨ ॥

தாத்—ப்ரம்மக்ஞானிபோல் காணப்படுகிறாய், உனக்கு யார் ப்ரும்மவித்யை உபதேசித்ததென்று கௌதமர்கேட்டார். மநுஷ்யர்கள் யாருமல்லவென்று ஸத்யகாமர் சொன்னார். அர்த்தபோதம். ஸ0-பா—எனக்கு வேண்டியதைத்தாமே உபதேசிக்கவேணும். இதரர் சொன்னதை நான் மதிக்கவில்லையென்று ஸத்யகாமர் சொன்னார்.

ரா-பா—எனக்கு வேண்டியதைச் சொல்லத்தாம் இருக்கும்போது நான் வேறேயொருவனை ப்ரார்த்திப்பேனா என்று ஸத்யகாமர் சொன்னார். (௨)

ப்ரஹ்மவிதிவ வை ஸோம்ய பாஸி கோ நு த்வாநுஶஶாஸேதி அந்யே மநுஷ்யேப்ய இதி ஹ ப்ரதிஜஜ்ஞே பகவாம்ஸ்த்வேவ மே காமே ப்ரூயாத் ஶ்ருதம் ஹ்யேவ மே பகவத்த்ருஶேப்ய ஆசார்யாத்தைவ வித்யா விதிதா ஸாதிஷ்டம் ப்ராபதீதி தஸ்மை ஹைததேவோவாசாத்ர ஹ

நகிஞ்சந வீயாயேதி வீயாயேதி ‖ ௩ ‖

ஸம்-ரா—ஆசார்யன்முகமாகக் கிரஹித்த வித்யைதான் ச்ரேஷ்டமானதென்று (சங்—பகவான்போன்ற—ரங்—தம்போன்ற) பெரியோர்கள் முகமாகக்கேட்டிருக்கிறேன். ஆதலால் தாமே எனக்கு பிரம்மவித்யையை உபதேசிக்கவேண்டுமென்று ஸத்யகாமர் ப்ரார்த்தித்தார். வ்ருஷபம் அக்கினி ஹம்ஸம் மத்கு நாலுமாக உபதேசித்த ஷோடசகல ப்ரம்மவித்யையையே கௌதமர் கொஞ்சமும் பேதப்படாமல் ஸத்யகாமருக்கு உபதேசித்தார். இவ்வித்யையில் பேதமில்லை யாதலால் ஒரேவிதமாக உபதேசிக்கப்பட்டது. வீயாசயதி என்று மறுபடிசொன்னது வித்யை முடிந்ததைக்காட்டுகிறது, (௩)

தஶம: கண்ட:.

உபகோஸலோ ஹ வை காமலாயந: ஸத்யகாமே ஜாபாலே ப்ரஹ்மசர்யமுவாஸ தஸ்ய ஹ த்வாதஶ வர்ஷாண்யக்நீந் பரிசசார ஸ ஹ ஸ்மாந்யாநந்தேவாஸிந: ஸமாவர்தயம்ஸ்தம் ஹ ஸ்மைவ ந ஸமாவர்தயதி ‖ ௧ ‖

சங்—மற்றொரு விதமாக ப்ரம்மவித்யை சொல்லப்படுகிறது. பரப்பிரமத்தின் கதியும் அக்னிவித்யையும் சொல்லப்படுகிறது. முறைபோல ச்ரத்தையும் தபஸ்ஸும் வித்யைக்குஸாதனமென்று காட்டுகைக்காக க்கதைசொல்லப்படுகிறது. ரா-உபகோஸலர் வித்யை சொல்லப்படுகிறது, கமலர் என்பவரின் புத்ரரான உபகோசலர் என்பவர் கீழ்சொன்ன ஜாபாலரென் ஜாபாலரென்றும் ஸத்யகாமரிடத்தில் ப்ருமசாரியா குலவாஸம் செய்துவந்தார் இவருடன் கூட குருசிச்ருஷைசெய்துவந்த அனேகருக்குவேதாத்தியயனம் செய்வித்து ஸமாவர்த்தனம் செய்து வந்தார் இவர் பன்னிரண்டு வருஷகாலம் அக்னிபரிச்யை செய்து வந்தும் இவர் ப்ரம்மஜ்ஞானத்தை அபேக்ஷித்தவராகையால் ஜாபாலார் இவருக்குவித்யை உபதேசிக்கவே யில்லை.

தம் ஜாயோவாச தப்தோ ப்ரஹ்மசாரீ குஶலமக்நீந் பரிசசாரீந்மா த்வாக்நய: பரிப்ரவோசந் ப்ரப்ரூஹ்யஸ்மா இதி தஸ்மை ஹாப்ரோச்யைவ ப்ரவாஸாஞ்சக்ரே ‖ ௨ ‖

ஸம்-ரா—தபஸியான இப்பிரம்மசாரி நன்றாக அக்னி சிச்ருஷைசெய்தான். இவனுக்கு வித்யோபதேசம் செய்யாமல் போனால் தம்மை அக்னிகள் சபிக்கும், ஆகலால் தாம் இவனுக்கு ப்ரம்மவித்யை உபதேசியுமென்று அவர பத்தினி சொன்னாள். இவள் இவ்வாறுசொல்லியும் அவர் வித்யோபதேசம் செய்யாமலே தேசாந்தரம் போனார். (௨)

ஸ ஹ வ்யாதிநாநஶிதும் தத்ரே தமாசார்யஜாயோவாச ப்ரஹ்மசாரிந்நஶாந கிந்நு நாஶ்நாஸீதி ஸ ஹோவாச பஹவ இமேஸ்மிந் புருஷே காமா நாநாத்யயா வ்யாதிபி: ப்ரதிபூர்ணோஸ்மி நாஶிஷ்யாமீதி ‖ ௩ ‖

ஸம்-ரா—உபகோசலர் மனோவியாதியால் பீடிக்கப்பட்டவராய் போசனம் செய்வதில்லையென்று ஸங்கல்பித்துக்கொண்டார். ஓ பிரம்மசாரியே நீயேன் போஜனம்செய்யவில்லை. போஜனம்செய்யென்று குருபத்னிசொன்னாள். (சங்) இப்புருஷ

ளிடத்தில் தோன்றும் நாநாவிதமான ஆசைகளே வியாதிகள் நான் ஆசைகளால் பூர்ணனாயிருக்கிறேன், (நாநா) ப்ராகிருதமான லோகங்களெல்லாம் பிறப்பு மூப்பு இறப்பு முதலிய ஆபத்துக்களுக்கிடமானது. அவைகள் எனக்குமுண்டு. (ஆகாது) ஆகையால் சாப்பிடுவதில்லையென்று உபகோசலர் சொன்னார். (௩)

அத ஹாக்நய: ஸமூதிரே தப்தோ ப்ரஹ்மசாரீ குசலம் ந: பர்யசாரீத்தந்தாஸ்மை ப்ரப்ரவாமேதி தஸ்மை ஹோசு: ॥ ௪ ॥

பொ-ரை—இவ்வாறு சொல்லி இவர் இருந்த பின்பு, கார்ஹபத்யம் முதலிய அக்னிகள் மூன்றும் இவர்செய்த பணிவிடைகளினால்மனமிரங்கி இப்பிரம்மசாரி தபஸ்வியாயிருந்துகொண்டு நமக்கு நன்றாய்ப்பணிவிடை செய்தான், இவனுக்கு நாம் பிரம்மவித்யையே உபதேசம் செய்வோம் என்று நிச்சயித்துக்கொண்டு உபகோசலருக்கு மெல்ல வருமாறு சொல்லின. (௪)

ப்ராணோ ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்மேதி ஸ ஹோவாச விஜாநாம்யஹம் யத்ப்ராணோ ப்ரஹ்ம கம் ச து கம் ச ந விஜாநாமீதி தே ஹோசுர்யத்வாவ கம் ததேவ கம் யதேவ கம் ததேவ கமிதி ப்ராணம் ச ஹாஸ்மை ததாகாசம் சோசு: ॥ ௫ ॥

பொ-ரை—ப்ராணன் பிரமம் கம்பிரம்மம், கம்பிரம்மம் என்று அக்னிகள் சொல்லின. பிராணன் பிரம்மமென்பது எனக்குத் தெரியும். கம் கம் இரண்டும் தெரியவில்லையென்று உபகோசலர் சொன்னார். கம்தான் கம் தான் கம் ப்ராணனென்ன ஆகாசம் என்று அக்னிகள் சொல்லின.

ஏகாதச: கண்ட:.

அத ஹைநம் கார்ஹபத்யோऽநுசசாஸ ப்ருதிவ்யக்நிரந்நமாதித்ய இதி ய ஏஷ ஆதித்யே புருஷோ த்ருச்யதே ஸோऽஹமஸ்மி ஸ ஏவாஹமஸ்மீதி ॥ ௧ ॥

பொ-ரை—இப்படி சொன்ன அக்னிகளுள்
பின் தனித்தனி தங்கள் தங்களதான அக்னிவித்யையை உபதேசிக்கத்தொடங்கின.
பூமி அக்னி அன்னம் சூர்யன் இந்நான்கும் எனது சரீரம் சூர்யனிடத்தில் காணப்படும் புருஷனே நான் நானே அவன் என்று கார்ஹபத்யாக்னி சொல்லிற்று
பொ-ரை—பூமி அன்னம் இவைகள் போஜ்யமாகையால்பரஸ்பரம் துல்யங்கள். அதுபோல அக்னியும் சூர்யனும். புஜிப்பதும் பாகம் செய்வதும் இவைகள் இரண்டுக்கும் துல்யதர்மங்கள். ஏ-பா—பாகம் செய்வதாலும் ப்ரகாசத்தைக் கொடுப்பதாலும் அக்னியும் சூர்யனும் ஒன்றென்று உபதேசிக்கப்பட்டது. அக்னிக்கு சூர்யனிடத்தில் ஒற்றுமைபோலே பூமி அன்னம் இவைகளோடு கிடையாது. (௧)

ஸ ய ஏதமேவம் வித்வாநுபாஸ்தேऽபஹதே பாபக்ருத்யாம் லோகீ பவதி ஸர்வமாயுரேதி ஜ்யோக்ஜீவதி நாஸ்யாவரபுருஷா: க்ஷீயந்த உப வயம் தம் புஞ்ஜாமோऽஸ்மிம்ச்ச லோகேऽமுஷ்மிம்ச்ச ய ஏதமேவம் வித்வாநுபாஸ்தே ॥ ௨ ॥

ஸ0-ரா—ப்ரம்மலோகத்தை அடைகிறான். அல்லது: ப்ரம்மலோகத்திற்குமார்க்கமான அக்னிலோகத்தை அடைகிறான். இவன் சிஷ்ய ஸந்ததியாரும் புத்ரசந்ததியாரும் பிரம்மக்ஞானிகளாகவே இருப்பார்கள். இவன் பரப்பிரம்மத்தை அடையுமளவாயில் இவனை நாங்கள் எல்லாலோகங்களிலும் ப்ரும்மப்ராப்தி விக்னங்களினின்றும் ரக்ஷிக்கிறோம். (உ)

அத த்வாதஶ: கண்ட:.

அத ஹைநமந்வாஹார்யபசநோऽநுஶஶாஸாபோ திஶோ நக்ஷத்ராணி சந்த்ரமா இதி ய ஏஷ சந்த்ரமஸி புருஷோ த்ருஶ்யதே ஸோऽஹமஸ்மி ஸ ஏவாஹமஸ்மீதி || க || ஸ ய ஏதமேவம் வித்வாநுபாஸ்தேऽபஹதே பாபக்ருத்யாம் லோகீ பவதி ஸர்வமாயுரேதி ஜ்யோக்ஜீவதி நாஸ்யாவரபுருஷா: க்ஷீயந்த உப வயம் தம் புஞ்ஜாமோऽஸ்மிம்ஶ்ச லோகேऽமுஷ்மிம்ஶ்ச ய ஏதமேவம் வித்வாநுபாஸ்தே || உ ||

ஸ0-ரா—ஜலம் திக்கு நக்ஷத்ரம் சந்திரன் இந்நான்கும் எனது சரீரம். சந்திரனிடத்தில் காணும் புருஷனே நான். நானே அவன். என்று தக்ஷிணாக்னி சொல்லிற்று மற்றவைகளுக்கு முன் கண்டதுபோலவே பொருள்கொள்க.

ஸ0—அன்னத்தோடு ஸம்பந்தமிருப்பதாலும் தேஜஸ்ஸாதலாலும் தெற்கு திக்கோடு சம்பந்தமிருப்பதாலும் தக்ஷிணாக்னியும் சந்த்ரனும் ஒன்றென்று சொல்லப்படுகிறது. ரா—ப்ரகாசம் செய்வதால் அக்னியும் சந்திரனும் ஒன்றென்று சொல்லப்படுகிறது. (க-உ)

அத த்ரயோதஶ: கண்ட:.

அத ஹைநமாஹவநீயோऽநுஶஶாஸ ப்ராண ஆகாஶோ த்யௌர்வித்யுதிதி ய ஏஷ வித்யுதி புருஷோ த்ருஶ்யதே ஸோऽஹமஸ்மி ஸ ஏவாஹமஸ்மீதி || க || ஸ ய ஏதமேவம் வித்வாநுபாஸ்தேऽபஹதே பாபக்ருத்யாம் லோகீ பவதி ஸர்வமாயுரேதி ஜ்யோக்ஜீவதி நாஸ்யாவரபுருஷா: க்ஷீயந்த உப வயம் தம் புஞ்ஜாமோऽஸ்மிம்ஶ்ச லோகேऽமுஷ்மிம்ஶ்ச ய ஏதமேவம் வித்வாநுபாஸ்தே || உ ||

ஸ0-ரா—ப்ராணன் ஆகாசம் ஸ்வர்க்கம் மின்னல் நான்கும் எனது சரீரம். மின்னலில் காணப்படும் புருஷனே நான். நானே அவன் என்று ஆஹவநீயாக்னி சொல்லிற்று. மற்றவைகளுக்கு முன்போல் பொருள்கொள்க. (க-உ)

அத சதுர்தஶ: கண்ட:.

தே ஹோசுருபகோஸலைஷா ஸோம்ய தேऽஸ்மத்வித்யாऽऽத்மவித்யா சாசார்யஸ்து தே கதிம் வக்தேத்யாஜகாம ஹாஸ்யாசார்யஸ்தமாசார்யோऽப்யுவாதோபகோஸல ௩ இதி || க ||

ஸ0—உபகோசலனே, இப்போது நாங்கள் உமக்கு அக்னி வித்யை ஆத்மவித்யை இரண்டையும் உபதேசித்தோம். வித்யையின் பலத்தை உமக்கு ஆசாரியர் உபதேசிப்பார் என்று அக்னிகள் மூன்றும் சொல்லின.

ரங்—உபகோசலரே, உமக்கு பிரம்மவித்யையை உபதேசியாமல் உமது குரு தேசாந்தரம் போனதினால் நீர் துக்கப்பட்டுக்கொண்டிருந்தபடியால் உம்மைத்தேற

தல் செய்வதற்காக ப்ரம்மத்தின் ஸ்வரூபமாத்ரத்தையும், அதற்கு அங்கமான வித்யையும் உபதேசித்தோம். ஆசார்யன் முகமாக கிரஹித்த வித்யையே ச்ரேஷ்டமாகையால் ஸமஸ்தகல்யாணகுணாச்ரயத்வம் முதலான பிரம்மகுணங்களையும் கண்ணென்றும் உபாசனஸ்தானத்தையும் அர்ச்சிராதிமார்க்கத்தையும் அவர் உமக்கு உபதேசிப்பார் என்று அக்னிகள் மூன்றும் சேர்ந்து சொல்லின.

அ-ரை—தேசாந்தரம்போயிருந்த ஆசார்யர் திரும்பிவந்தார். உபகோசலாவென்று கூப்பிட்டார். (க)

ப⁴க³வ இதி ஹ ப்ரதிஶுஶ்ராவ ப்³ரஹ்மவித³ இவ ஸோம்ய தே முக²ம்
பா⁴தி கோ நு த்வாநுஶஶாஸேதி கோ நு மாநுஶிஷ்யாத்³ போ⁴ இதீ
ஹாபேவ நிஹ்நுத இமே நூநமீத்³ருஶா அந்யாத்³ருஶா இதீஹாக்³நீ
நப்⁴யூதே³ கிம் நு ஸோம்ய கில தே(அ)வோசந்நிதி ॥ ௨ ॥

ஸம்-ரா—ஸ்வாமி என்று உபகோசலர்சொன்னார். அப்பா, உனது முகமானது பிரம்மஞானியின் முகம்போல் விளங்குகிறது. உனக்குப் பிரம்மவித்யையை உபதேசித்தது யாரென்று ஸத்யகாமர் கேட்டார். தாம் தேசாந்தரம்போயிருந்தபோது வேறுயார் எனக்கு உபதேசிப்பவர் என்று உபகோசலர் மறைத்தும் மறையாமலும் சொல்லி க்ஷணம் பொறுத்தலும் (சங் - இப்போது நடுங்கிக்கொண்டிருக்கிற, ரங் - இப்போது ஜ்வாலாரூபமாயிருக்கிற) அக்னிகளைமுன்பு வேறுரூபமாயிருந்து எனக்கு உபதேசித்தனவென்றுசொன்னார். அவைகளசொன்னதென்னவென்று ஆசார்யர் கேட்டார். (உ)

இத³மிதி ஹ ப்ரதிஜஜ்ஞே லோகாந்வாவ கில ஸோம்ய தே(அ)வோசந்
நஹம் து தே தத்³வக்ஷ்யாமி யதா² புஷ்கரபலாஶ ஆபோ ந ஶ்லிஷ்யந்த
ஏவமேவம்விதி³ பாபம் கர்ம ந ஶ்லிஷ்யத இதி ப்³ரவீது மே ப⁴க³வாநிதி த
ஸ்மை ஹோவாச ॥ ௩ ॥

ஸம்-ரா—அக்னிகள் சொன்னதை உபகோசலர் ஆசார்யனுக்குச் சொன்னார் சங்—முழுதும் சொல்லாமல் சிலவற்றைச் சொன்னார். பூமி முதலிய லோகங்களை மாத்திரமே அவை உனக்குச் சொல்லின. ரங்—அங்கவித்யை மாத்திரமே அவை உனக்குச் சொல்லின. ப்ரம்மஸ்வரூபத்தை பூர்ணமாகச் சொல்லவில்லை. அதை யான் உனக்குப் பூர்ணமாகச்சொல்லுகிறேன். தாமரை இலையில் ஜலம் ஒட்டுகிறதில்லையன்றோ. அதுபோல இந்தப் பிரமத்தை அறிந்தவனிடத்தில் ஒருவித பாபமும் சம்பந்திக்கமாட்டாது என்று ஆசார்யர் சொன்னார். அப்படிப்பட்ட பிரம்ம வித்யையை எனக்கு உபதேசிக்கவேணுமென்று உபகோசலர் கேட்டார். ஆசார்யர் உபதேசிக்கத்தொடங்கினார்.

பஞ்சத³ஶ: க²ண்ட:

ய ஏஷோ(அ)க்ஷிணி புருஷோ த்³ருஶ்யத ஏஷ ஆத்மேதி ஹோ
வாசைதத³ம்ருதமப⁴யமேதத்³ப்³ரஹ்மேதி தத்³யத்³யப்யஸ்மிந்ஸர்பிர்வோத³கம்
வா ஸிஞ்சதி வர்த்மநீ ஏவ க³ச்ச²தி ॥ க ॥

தாத்—யோகிகளால் கண்ணில் காணப்படும் புருஷனே ஆத்மா, அவன் அமிருதன், அபயன், ப்ரம்மம். அதனாலேதான் ஜலமோ நெய்யோ எது கண்ணில் போடப்பட்டாலும் அதில் ஸ்பர்சியாமல் வெளியே வந்துவிடுகிறது.

ஶ-ப—கீழ் ஸுகாகாசமாகச் சொல்லப்பட்டதே இங்கு அக்ஷி புருஷனாகச் சொல்லப்படுகிறது. எல்லா ப்ராணிகளுக்கும் ஆத்மா, மரணதர்மம் இல்லாதவன், அதாவது நாசமில்லாதவன், அதனாலேயே பயமில்லாதவன், அளவிடக்கூடாதவன். அந்த ஸ்தானத்திற்கே ஜலம் நெய் முதலியவை ஒட்டாமலிருக்கும்படியான மகிமையிருக்கிறபடியால் அவ்விடத்திலுள்ள புருஷனது மகிமையைச் சொல்லவேணுமோ என்பது கருத்து.

ரா—ஆத்மா நியந்தா. அமிருதன்-நிரதிசய சுகரூபன். அபயன்-துக்கஸம்பந்தமில்லாதவன், ப்ரும்மம். அளவில்லாத பெருமையுடையவன். நிர்லேபனான புருஷனது பிரபாவத்தால் அவன் ஸ்தானமான கண்ணிலும் ஒன்றும் ஒட்டுகிறதில்லை. (௧)

𑌏𑌤𑌂 𑌸𑌂𑌯𑌦𑍍𑌵𑌾𑌮 𑌇𑌤𑍍𑌯𑌾𑌚𑌕𑍍𑌷𑌤 𑌏𑌤𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌵𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌭𑌿
𑌸𑌂𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑍍𑌯𑍇𑌨𑌂 𑌵𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌭𑌿𑌸𑌂𑌯𑌨𑍍𑌤𑌿 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦 ॥ ௨ ॥

ஶ-ரா—எல்லோராலும் வேண்டப்படத்தக்க நல்ல குணங்களெல்லாம் சேர்ந்திருப்பதாலே இந்த அக்ஷி புருஷன் ஸம்யத் வாமனென்று சொல்லப்படுகிறான். இக்குணத்தோடு அவனை உபாசிப்பவனை நல்ல குணங்கள் தானே வந்தடையும்.

அர்த்தபேதம்—ஸம்யத்வாமன், எல்லாராலும் வேண்டப்படத்தக்க குணங்களால் தானே வந்தடையப்பட்டவன். அதாவது ஸமஸ்த கல்யாண குணாத்மகன், அல்லது ஸத்யஸங்கல்பன்.

𑌏𑌷 𑌉 𑌏𑌵 𑌵𑌾𑌮𑌨𑍀𑌰𑍇𑌷 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌵𑌾𑌮𑌾𑌨𑌿 𑌨𑌯𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌵𑌾
𑌮𑌾𑌨𑌿 𑌨𑌯𑌤𑌿 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦 ॥ ௩ ॥

ஶ-ஂ-ரா—புண்ய கர்மபலங்களை புண்யத்துக்குத் தக்கபடி பிராணிகளை அடைவிப்பதால் இவன் வாமநீ என்று சொல்லப்படுகிறான். இந்த வாமநீத்வகுணத்தோடு உபாஸிப்பவன் தத்கிருது உபாயத்தால் தன்னை அடைந்தவர்களுக்கு நன்மையையுண்டாக்குவான்.

அர்த்தபேதம்—வாமனித்வமாவது தன்னை அடைந்தவர்களுக்கு மங்களத்வத்தை யுண்டாக்குவது. (௩)

𑌏𑌷 𑌉 𑌏𑌵 𑌭𑌾𑌮𑌨𑍀𑌰𑍇𑌷 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌭𑌾𑌤𑌿 𑌸
𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌭𑌾𑌤𑌿 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦 ॥ ௪ ॥

ஶ-ஂ-ரா—ஸர்வலோகங்களிலும் வியாபித்த காந்தியுடையசரீரத்தை உடைத்தாகையே பாமநீயாகை. உபாஸகன் வேண்டினால் அவ்வித சரீரத்தையும் பெறுவன். இவைகள் கேவலஸ்தோத்ரமாத்ரமல்ல. (௪)

𑌅𑌥 𑌯𑌦𑍁 𑌚𑍈𑌵𑌾𑌸𑍍𑌮𑌿𑌞𑍍𑌛𑌵𑍍𑌯𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌯𑌦𑌿 𑌚 𑌨𑌾𑌰𑍍𑌚𑌿𑌷𑌮𑍇𑌵𑌾𑌭𑌿𑌸𑌂
𑌭𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌚𑌿𑌷𑍋𑌹𑌰𑌹𑍍𑌨 𑌆𑌪𑍂𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌪𑌕𑍍𑌷𑌮𑌾𑌪𑍂𑌰𑍍𑌯𑌮𑌾𑌣 𑌪𑌕𑍍𑌷𑌾
𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌷𑌡𑌦𑌙𑍍𑌙𑍇𑌤𑌿 𑌮𑌾𑌸𑌾𑌂𑌸𑍍𑌤𑌾𑌨𑍍𑌮𑌾𑌸𑍇𑌭𑍍𑌯𑌃 𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌂 𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌾
𑌦𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌸𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌸𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌤𑌂 𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌮𑌾
𑌨𑌵𑌃 ॥ ௫ ॥

𑌸 𑌏𑌨𑌾𑌨𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌗𑌮𑌯𑌤𑍍𑌯𑍇𑌷 𑌦𑍇𑌵𑌪𑌥𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑌥 𑌏𑌤𑍇
𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌾 𑌇𑌮𑌂 𑌮𑌾𑌨𑌵𑌮𑌾𑌵𑌰𑍍𑌤𑌂 𑌨𑌾𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌨𑌾𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 ॥ ௬ ॥

[illegible]

ஸ-ரா—இக்குணங்களோடு பிரம்மத்தை உபாசிப்பவர்களுக்கு மரணம் நேர்ந்த பிறகு தஹநம் முதலிய சவகர்மங்கள் செய்யப்பட்டாலும் செய்யப்படாவிட்டாலும் அவர்கள் சரீரத்தை விட்டவுடனே அர்ச்சிரபிமானி தேவதையையும், அதினின்றும் மத்யான்னுபிமானி தேவதையையும் அதினின்றும் சுக்கிலபக்ஷ தேவதையையும், அதினின்றும் உத்தராயண தேவதையையும் அதினின்றும் ஸம்வத்ஸராபிமானி தேவதையையும், அதினின்றும் ஸூர்யனையும், அதிலிருந்து சந்திரனையும், அதிலிருந்து வித்யுத் தேவதையையும் அடைவார்கள். இவர்கள் அங்கிருக்கையில் மனிதஸ்ருஷ்டியில் சேராத அமானவன் என்னும் புருஷன் அழைத்துக்கொண்டுபோய் பரப்பிரும்மத்தை அடைவிக்கிறான். இதுவே அர்ச்சிராதி மார்க்கமென்பது. இந்த வழியாய் மேலே போனவர்கள் மனிதலோகத்தின் சுழலுக்கு ஒருபோதும் திரும்பிவரமாட்டார்கள். நாவர்த்தந்தே என்று மறுபடி சொன்ன வித்யை முடிந்ததைக்காட்டுகிறது. (௫)

அ-பே-ஸ—இவனே பிரம்மமாகையால் இவன் அடைவது வேறொரு பிரம்மமல்லவாகையால் இங்கு ஸத்யலோகத்திலுள்ள பிரும்மாவை அடைவிக்கிறானென்று பொருள் கொள்ளை உசிதம். ரா—இங்கு சொன்ன அர்ச்சிராதிமார்க்கம் எல்லா வித்யைக்கும் துல்யமேயென்று ஸித்தாந்தம். (௬)

𑌷𑍋𑌡𑌶𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃.

𑌏𑌷 𑌹 𑌵𑍈 𑌯𑌜𑍍𑌞𑍋 𑌯𑍋𑌽𑌯𑌂 𑌪𑌵𑌤 𑌏𑌷 𑌹 𑌯𑌨𑍍𑌨𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍁𑌨𑌾𑌤𑌿 𑌯𑌦𑍇𑌷 𑌹 𑌯𑌨𑍍𑌨𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍁𑌨𑌾𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌷 𑌏𑌵 𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌮𑌨𑌶𑍍𑌚 𑌵𑌾𑌕𑍍𑌚 𑌵𑌰𑍍𑌤𑌨𑍀 ॥௧॥

ஸ-ரா—உபாசனம் விதிக்கப்பட்ட ஸந்தர்ப்பத்தோடு சேர்ந்ததாலும் ஆரணியகமாகையாலும் யாகத்தில் பிசகு நேரிடுமானால் அதற்கு வியாஹ்ருதிகளால் ப்ராயச்சித்த ஹோமம் செய்யவேண்டுமென்றும் அதை அறிந்தவனே பிரம்மாவாயிருக்கவேண்டுமென்றும் இவன் மௌனமாயிருக்கவேணுமென்றும் விதிக்கப்படுகிறது. எப்போதும் ஸஞ்சரிப்பதும் தன் ஸஞ்சாரத்தாலே எல்லாவற்றையும் பரிசுத்தம் செய்வதுமான வாயுவே யஜ்ஞம். யா-சஞ்சரிப்பவன் 7-நாதி சுத்தம் செய்வது இப்பதங்களில் ய-ந-இரண்டு எழுத்திருப்பதாலும் ஞகரம் நகரத்தின் விகாரமாகையாலும் யஜ்ஞம் என்னும் சொல்லானது ஸஞ்சரித்துக்கொண்டே சுத்தியை உண்டாக்குவதென்னும் பொருள்கொண்டது. இதனால் யஜ்ஞம் கமனம் செய்வதென்று பொருளாயிற்று. வாக்கு மனது இரண்டும் அதற்கு வழி. (௧)

𑌤𑌯𑍋𑌰𑌨𑍍𑌯𑌤𑌰𑌾𑌂 𑌮𑌨𑌸𑌾 𑌸𑌂𑌸𑍍𑌕𑌰𑍋𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌵𑌾𑌚𑌾 𑌹𑍋𑌤𑌾𑌧𑍍𑌵𑌰𑍍𑌯𑍁𑌰𑍁𑌦𑍍𑌗𑌾𑌤𑌾𑌨𑍍𑌯𑌤𑌰𑌾𑌂 𑌸 𑌯𑌤𑍍𑌰𑍋𑌪𑌾𑌕𑍃𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑌨𑍁𑌵𑌾𑌕𑍇 𑌪𑍁𑌰𑌾 𑌪𑌰𑌿𑌧𑌾𑌨𑍀𑌯𑌾𑌯𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌵𑍍𑌯𑌵𑌵𑌦𑌤𑌿 ॥ ௨ ॥

𑌅𑌨𑍍𑌯𑌤𑌰𑌾𑌮𑍇𑌵 𑌵𑌰𑍍𑌤𑌨𑍀𑌂 𑌸𑌂𑌸𑍍𑌕𑌰𑍋𑌤𑌿 𑌹𑍀𑌯𑌤𑍇𑌽𑌨𑍍𑌯𑌤𑌰𑌾 𑌸 𑌯𑌥𑍈𑌕𑌪𑌾𑌦𑍍𑌵𑍍𑌰𑌜𑌨𑍍𑌰𑌥𑍋 𑌵𑍈𑌕𑍇𑌨 𑌚𑌕𑍍𑌰𑍇𑌣 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍋 𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑌸𑍍𑌯 𑌯𑌜𑍍𑌞𑍋 𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌯𑌜𑍍𑌞𑌂 𑌰𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌯𑌜𑌮𑌾𑌨𑍋𑌽𑌨𑍁𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌸 𑌇𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑌾𑌪𑍀𑌯𑌾𑌨𑍍𑌭𑌵𑌤𑌿 ॥ ௩ ॥

ஸ-ரா—அவைகளில் மனம் என்னும் வழியை ப்ரம்மத்யானத்தோடு கூடிய மனதினாலும், ஹோதா அத்வர்யு உத்காதா இவர்கள் வாக்கென்னும் வழியைநன்றாய் ப்ரயோகிக்கப்படும் வாக்கினாலும் ஸம்ஸ்கரிக்கிறார்கள். யாகத்தில் ப்ராதரநுவாக

சஸ்திரம் ஆரம்பித்தபோது பரிதானீயை ருக்சொல்லும் வரையில் ப்ரம்மா மௌனமாயிராமல் போய்விட்டால், மனதின் தியானம் மாறுவதால் மனதென்னும்வழி நசித்துவிடுகிறது. மற்றொரு வழிமாத்திரம் நிற்கிறது. ஒருகாலால் நடக்கும் மனிதனும் ஒரு சக்கிரத்தால் நடக்கும் ரதமும்போல இந்த யாகமும் நசிக்கிறது. யாகம் நசித்தால் யஜமானன் நசிக்கிறான். பாபிஷ்டனாகவும் ஆகிறான். (௩)

அத² யத்ரோபாக்ருதே ப்ராதரநுவாகே ந புரா பரிதா⁴நீயாயா ப்³ரஹ்மா வ்யவவத³த்யுபே⁴ ஏவ வர்தநீ ஸம்ஸ்குர்வந்தி ந ஹீயதே(அ)ந்யதரா ॥ ஸ யதோ²ப⁴யபாத்³வ்ரஜந்ரதோ² வோபா⁴ப்⁴யாம் சக்ராப்⁴யாம் வர்தமாந: ப்ரதிதிஷ்ட²த்யேவமஸ்ய யஜ்ஞ: ப்ரதிதிஷ்ட²தி யஜ்ஞம் ப்ரதிதிஷ்ட²ந்தம் யஜமாநோ(அ)நுப்ரதிதிஷ்ட²தி ஸ இஷ்ட்வா ஶ்ரேயாந்ப⁴வதி ॥௫॥

ப-௦-ரா—அதுவரையில் பிரம்மா மௌனமாயிருந்தால் இரண்டு வழியும் ஸம்ஸ்கரிக்கப்பட்டதாகிறது. ஒன்று குறைவாகிறதில்லை. (ப) அதனால் இரண்டு காலால் நடக்கும் மனிதனும் இரண்டு சக்கிரத்தால் போகும் தேரும்போல யாகம் நிறைவேறுகிறது. யஜமானன் ப்ரதிஷ்டையை அடைகிறான். ச்ரேஷ்டனுமாகிறான். (௫)

இதி ஷோட³ஶ: க²ண்ட³:.

ப்ரஜாபதிர்லோகாநப்⁴யதபத்தேஷாம் தப்யமாநாநாம் ரஸாந்ப்ராவ்ருஹத³க்³நிம் ப்ருதி²வ்யா வாயுமந்தரிக்ஷாதா³தி³த்யம் தி³வ: ॥௧॥

ப-௦-ரா—கீழ் ப்ரம்மாவுக்கு மௌனம் விதிக்கப்பட்டது. இதில் யஜ்ஞத்தில் நேரும் தவறுகளுக்கு வியாஹ்ருதிஹோமம் ப்ராயச்சித்தமென்று விதிக்கப்படுகிறது.

ப்ரம்மாவானவர் ஸாரத்தைக் கண்டறிவதற்காக லோகங்களில் ஆலோசித்து, பூமியினின்று அக்கினியையும் ஆகாசத்தினின்று வாயுவையும் ஸ்வர்க்கத்தினின்றும் ஸூர்யனையும் ச்ரேஷ்டமாகக் கண்டெடுத்தார். (௧)

ஸ ஏதாஸ்திஸ்ரோ தே³வதா அப்⁴யதபத்தாஸாம் தப்யமாநாநாம் ரஸாந்ப்ராவ்ருஹத³க்³நேர்ருசோ வாயோர்யஜூம்ஷி ஸாமாந்யாதி³த்யாத் ॥௨॥

ப-௦-ரா—அதிலும் ஸாரக்கிரஹணம் செய்வதற்காக அத்தேவதைகளை ஆலோசித்து, அக்கினியிலிருந்து ருக் வேதத்தையும் வாயுவிலிருந்து யஜுர் வேதத்தையும் ஸூர்யனிலிருந்து ஸாமவேதத்தையும் சிரேஷ்டமாகக் கண்டெடுத்தார். (௨)

ஸ ஏதாம் த்ரயீம் வித்³யாமப்⁴யதபத்தஸ்யாஸ்தப்யமாநாயா ரஸாந்ப்ராவ்ருஹத்³பூ⁴ரித்யுக்³ப்⁴யோ பு⁴வரிதி யஜுர்ப்⁴ய: ஸ்வரிதி ஸாமப்⁴ய: ॥

ப-௦-ரா—அதிலும் ஸாரத்தைக் கண்டறிவதற்காக பிரம்மா மூன்றுவேதத்தையும் ஆராய்ந்தார். ருக் வேதத்தினின்றும் (பூ:) என்பதையும் ஸாமவேதத்தினின்றும் 'ஸுவ:' என்பதையும் ச்ரேஷ்டமாகக் கண்டெடுத்தார். இவை மூன்றுந்தான் வ்யாஹ்ருதிகள். (௩)

தத்³யத்³ய்ருக்தோ ரிஷ்யேத்³பூ⁴: ஸ்வாஹேதி கா³ர்ஹபத்யே ஜுஹுயாத்³ருசாமேவ தத்³ரஸேநர்சாம் வீர்யேணர்சாம் யஜ்ஞஸ்ய விரிஷ்டம் ஸந்த³தா⁴தி ॥ ௪ ॥

ஸ-ரா—யாகத்தில் ருக்கில் ஏதாவது பிசகு நேரிடுமானால் கார்ஹபத்தியம் என்னும் அக்னியில் 'பூ: ஸ்வாஹா' என்று ஹோமம் செய்யவேண்டியது. ருக்வேதத்தின் வீர்யமும் ஸாரமுமாகிய இந்த வியாஹ்ருதிஹோமத்தால் யஜ்ஞத்தின் ருக்கினால் வந்த பிசகை சரிப்படுத்திக்கொள்ளுவது. (௪)

𑌸 𑌯𑌦𑌿 𑌯𑌜𑍁𑌷𑍍𑌟𑍋 𑌰𑌿𑌷𑍍𑌯𑍇𑌦𑍍𑌭𑍁𑌵𑌃 𑌸𑍍𑌵𑌾𑌹𑍇𑌤𑌿 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌗𑍍𑌨𑍌 𑌜𑍁𑌹𑍁𑌯𑌾-
𑌦𑍍𑌯𑌜𑍁𑌷𑌾𑌮𑍇𑌵 𑌤𑌦𑍍𑌰𑌸𑍇𑌨 𑌯𑌜𑍁𑌷𑌾𑌂 𑌵𑍀𑌰𑍍𑌯𑍇𑌣 𑌯𑌜𑍁𑌷𑌾𑌂 𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌯
𑌵𑌿𑌰𑌿𑌷𑍍𑌟𑌂 𑌸𑌂𑌦𑌧𑌾𑌤𑌿 ॥௫॥

ஸ-ரா-தாத்—யஜுர்வேதத்தில் ஏதாவது பிசகு நேரிட்டால் தக்ஷிணாக்னியில் 'புவ: ஸ்வாஹா' என்று ஹோமம் செய்யவேண்டியது. யஜுர்வேதத்தின் வீர்யமும் ஸாரமுமாகிய இந்த வ்யாஹ்ருதி ஹோமத்தால் யாகத்தில் யஜுஸ்ஸில் நேர்ந்த பிறழ்தல்களை சரிப்படுத்திக்கொள்வது. (௫)

𑌸 𑌯𑌦𑌿 𑌸𑌾𑌮𑌤𑍋 𑌰𑌿𑌷𑍍𑌯𑍇𑌤𑍍𑌸𑍍𑌵𑌃 𑌸𑍍𑌵𑌾𑌹𑍇𑌤𑍍𑌯𑌾𑌹𑌵𑌨𑍀𑌯𑍇 𑌜𑍁𑌹𑍁𑌯𑌾-
𑌤𑍍𑌸𑌾𑌮𑍍𑌨𑌾𑌮𑍇𑌵 𑌤𑌦𑍍𑌰𑌸𑍇𑌨 𑌸𑌾𑌮𑍍𑌨𑌾𑌂 𑌵𑍀𑌰𑍍𑌯𑍇𑌣 𑌸𑌾𑌮𑍍𑌨𑌾𑌂 𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌵𑌿𑌰𑌿𑌷𑍍𑌟𑌂
𑌸𑌂𑌦𑌧𑌾𑌤𑌿 ॥௬॥

ஸ-ரா—ஸாமத்தில் பிசகு நேரிட்டால் ஆஹவநீயாக்னியில் 'ஸுவ: ஸ்வாஹா' என்று ஹோமம் செய்யவேண்டியது. ஸாமவேதத்தின் வீர்யமும் ஸாரமுமாகிய இந்த வ்யாஹ்ருதி ஹோமத்தால் ஸாமவேதத்தில்நேரிட்ட பிறழுதலை சரிப்படுத்திக் கொள்வது. யாகத்தில இவைதான் ப்ராயச்சித்தாஹுதி. (௬)

𑌤𑌦𑍍𑌯𑌥𑌾 𑌲𑌵𑌣𑍇𑌨 𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌂 𑌸𑌂𑌦𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑍇𑌨 𑌰𑌜𑌤𑌂 𑌰
𑌜𑌤𑍇𑌨 𑌤𑍍𑌰𑌪𑍁 𑌤𑍍𑌰𑌪𑍁𑌣𑌾 𑌸𑍀𑌸𑌂 𑌸𑍀𑌸𑍇𑌨 𑌲𑍋𑌹𑌂 𑌲𑍋𑌹𑍇𑌨 𑌦𑌾𑌰𑍁
𑌦𑌾𑌰𑍁 𑌚𑌰𑍍𑌮𑌣𑌾 ॥௭॥ 𑌏𑌵𑌮𑍇𑌷𑌾𑌂 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌮𑌾𑌸𑌾𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌮
𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍍𑌯𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾 𑌵𑍀𑌰𑍍𑌯𑍇𑌣 𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌵𑌿𑌰𑌿𑌷𑍍𑌟𑌂 𑌸𑌂𑌦𑌧𑌾𑌤𑌿𑌭𑍇
𑌷𑌜𑌕𑍃𑌤𑍋 𑌹 𑌵𑌾 𑌏𑌷 𑌯𑌜𑍍𑌞𑍋 𑌯𑌤𑍍𑌰𑍈𑌵𑌂𑌵𑌿𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌭𑌵𑌤𑌿 ॥௮॥

ஸ-ரா—உப்பினால் பொன்னும் பொன்னால் வெள்ளியும் வெள்ளியால் தாம்பரமும தாம்பரத்தால் ஈயமும் ஈயத்தால் இரும்பும் இரும்பால் மரமும் தோலினால் மரமும் சந்தானம் செய்யப்படுவதுபோல (7) (பொன்னுக்கு ஸந்தானமாவது மிருதுப்படுத்துகை.) லோகங்களில் ஸாரமானவை மூன்று தேவதைகள் அவைகளில் ஸாரமானவை மூன்று வேதங்கள், அவைகளில் ஸாரமும் வீர்யமுமான இம்மூன்று வியாஹ்ருதிகளினால் யாகத்தில் நேரிடும் பிசகுகளை யெல்லாம் ஸரிசெய்துகொள்ளலாம். இவற்றை அறிந்தவன் எந்த யாகத்தில் பிரம்மாவாக இருக்கிறானோ, அந்த யாகமானது கைதேர்ந்த வைத்தியனால் சிகித்ஸை செய்யப்பட்ட ரோகிபோலவாம்.

𑌏𑌷 𑌹 𑌵𑌾 𑌉𑌦𑌕𑍍𑌪𑍍𑌰𑌵𑌣𑍋 𑌯𑌜𑍍𑌞𑍋 𑌯𑌤𑍍𑌰𑍈𑌵𑌂𑌵𑌿𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌭𑌵𑌤𑍍𑌯𑍇
𑌵𑌂𑌵𑌿𑌦𑌂 𑌹 𑌵𑌾 𑌏𑌷𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌮𑌨𑍁𑌗𑌾𑌥𑌾 𑌯𑌤𑍋 𑌯𑌤 𑌆𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌤𑌤𑍍
𑌤𑌦𑍍𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥ ௯ ॥ 𑌮𑌾𑌨𑌵𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑍈𑌕 𑌋𑌤𑍍𑌵𑌿𑌕𑍍𑌕𑍁𑌰𑍂𑌨𑌶𑍍𑌵𑌾𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌤𑍍
𑌯𑍇𑌵𑌂𑌵𑌿𑌦𑍍𑌧 𑌵𑍈 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌯𑌜𑍍𑌞𑌂 𑌯𑌜𑌮𑌾𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌂𑌶𑍍𑌚𑌰𑍍𑌤𑍍𑌵𑌿𑌜𑍋𑌽𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌤𑌿

தஸ்மாதேவம்விதேவ ப்ரஹ்மாணம் குர்வீத நாநேவம்விதம் நாநேவம்விதம் ‖ ௧௦ ‖

ஸo-ரா—இப்படி அறிந்தவனை ப்ரஹ்மாவாகப்பெற்ற யாகமானது தெற்கு பக்கம் உசரமாயும் வடக்குபக்கம் பள்ளமாயுமிருப்பது. உத்தரகதிக்கு ஹேதுவானது. இப்படிப்பட்ட பிரம்மாவைப்பற்றி ஒரு காதை உண்டு. மௌனத்தோடுகூடிய பிரம்மாவானவன் யாகத்தில் எங்கே எங்கே என்ன பிசகு நேரிட்டாலும் யுத்தம் செய்பவர்களை குதிரை ரக்ஷிப்பதுபோல எல்லா பிசகுகளுக்கும் பரிஹாரம்செய்து யாகம் யஜமானன் ருத்விக்குகள் எல்லாரையும் ரக்ஷிப்பன். ஆகையால் இவ்விஷயங்களை அறிந்தவனையே ப்ரும்மாவாக வைத்துக்கொள்ளவேண்டுமே அல்லது இவ்விஷயம் தெரியாதவனை பிரம்மாவாக வைத்துகொள்ளக்கூடாது. நாநேவம் விதம் என்று மறுபடி சொன்னது அத்யாயம் முடிந்ததைக் காட்டுகிறது.

மத்வ—ஸர்வ தேவதைகளையும் புசிப்பது (ஸம்ஹரிப்பது) வாயுவே. வாயுவை ஸம்ஹரிப்பது புசிப்பது விஷ்ணு. அவரை ஸம்ஹரிப்பது (புசிப்பது) யாருமில்லை வாயுவ்ருஷபமாயும் அக்னி தானும் ப்ருஹ்மபஹம்ஸமாயும் வருணன் மத்குவாயும் ஸத்யகாமருக்கு உபதேசித்தார்கள். வாயுவையும் விஷ்ணுவையும் தியானம்செய்து கொண்டு ப்ரஹ்மா மௌனி ஆயிருக்கவேணும். (௧-௧௦)

நாலாம் ப்ரபாடகம் முற்றது.

இதி சாந்தோக்யோபநிஷதி சதுர்த்த: ப்ரபாடக:.

ஹரி: ஓம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

சாந்தோக்யோபநிஷதி - பஞ்சம: ப்ரபாடக:.

ப்ரதம: கண்ட:.

ஹரி: ஓம் ‖ யோ ஹ வை ஜ்யேஷ்டம் ச ஶ்ரேஷ்டம் ச வேத ஜ்யேஷ்டஶ்ச ஹ வை ஶ்ரேஷ்டஶ்ச பவதி ப்ராணோ வாவ ஜ்யேஷ்டஶ்ச ஶ்ரேஷ்டஶ்ச ‖௧‖

ஸ-ரா—பிராணவித்யை ஆரம்பிக்கப்படுகிறது. வயதினால் பெரியதையும் குணத்தினால் மேல்பட்டதையும் அறிபவன் பெரியவனும் மேல்பட்டவனுமாவன். அப்படி பெரியதும் மேல்பட்டதும் ப்ராணனே. (௧)

யோ ஹ வை வஸிஷ்டம் வேத வஸிஷ்டோ ஹ ஸ்வாநாம் பவதி வாக்வாவ வஸிஷ்ட: ‖௨‖

ஸo-ரா—வஸிஷ்டமானதை அறிந்தவன் தன் ஜ்ஞாதிகளுக்குள் வஸிஷ்டனாவன். வாக்கே வஸிஷ்டம்.

அர்த்தம் பேதம்—வஸிஷ்டம் - மறைப்பது, தனமுடையது ஆதல் கர்ப்பத்தில் புருஷனிருக்கும்போது ப்ராணவ்யாபாரத்துக்குப் பின்பே இந்திரியவ்யாபாரங்கள் உண்டாவதால் ப்ராணன் பெரியது. இந்திரியவ்யாபாரங்கள் எப்போதும் பிராணனுக்கு அதீனமானதாகையால் ப்ராணனே மேற்பட்டது. உயர்ந்த வாக்குடைய புருஷர்களே அந்யரை பரிபவிக்கிறார்கள். தனவான்களும் ஆகிறார்கள். ஆகையால் வாக்கே வஸிஷ்டம். (௨)

யோ ஹ வை ப்ரதிஷ்டாம் வேத ப்ரதிதிஷ்டத்யஸ்மிம்ஶ்ச லோகே உஉமுஷ்மிம்ஶ்ச சக்ஷுர்வாவ ப்ரதிஷ்டா ॥ ௩ ॥

ஸ0-ரா—ப்ரதிஷ்டையை யறிந்தவன் இந்த லோகத்திலும் பரலோகத்திலும் ப்ரதிஷ்டையை அடைவன். ப்ரதிஷ்டையென்பது கண்களே. ப்ரதிஷ்டையாவது சுசமான இருப்பு. அதற்கேதுவாக மேடுபள்ளங்களை அறிவது கண்ணே ஆகையால் அவை பிரதிஷ்டையென்று சொல்லப்பட்டன. (௩)

யோ ஹ வை ஸம்பதம் வேத ஸம் ஹாஸ்மை காமா: பத்யந்தே தைவாஶ்ச மாநுஷாஶ்ச ஶ்ரோத்ரம் வாவ ஸம்பத் ॥ ௪ ॥

ஸ0-ரா—ஸம்பத்தை அறிந்தவனுக்கு ஸ்வர்க்காதிகளான தேவதைகளுக்குரிய காமங்களும் பசுமுதலிய மனிதர்க்குரிய காமங்களும் கைக்கூடும். காதால் வேத வேதார்த்தங்களைக்கேட்டு அதன்படி கர்மங்களை அனுஷ்டித்து அதனால் மனோரத பூர்த்திபெறவேண்டுமாகையால் ஸம்பத்து காதுகளே. (௪)

யோ ஹ வா ஆயதநம் வேதாயதநம் ஹ ஸ்வாநாம் பவதி மநோ ஹ வா ஆயதநம்

ஸ0-ரா—ஆயதனத்தை அறிந்தவன் தன் ஜ்ஞாதிகளுக்கு ஆயதனமாவின். ஆயதனமென்பது ஆச்ரயம். மாலை சந்தனம் முதலிய போகங்களை அனுபவிப்பத ற்கு ஆச்ரயமாகையால் ஆயதனம் மனதே. (௫)

அத ஹ ப்ராணா அஹம் ஶ்ரேயஸி வ்யூதிரே உஹம் ஶ்ரேயாநஸ்ம்யஹம் ஶ்ரேயாநஸ்மீதி தே ஹ ப்ராணா: ப்ரஜாபதிம் பிதரமேத்யோசுர்பகவந் கோ ந: ஶ்ரேஷ்ட இதி ॥ ௬ ॥

ஸ0-ரா—கீழ்ச்சொன்ன ஐந்திலும் முக்கிய பராணனே உத்திருஷ்டமென்று காட்டும்பொருட்டு கதை ஆரம்பிக்கப்படுகிறது. ப்ராணன் வாக்கு கண் காது மன து என்னும் ஐந்து ப்ராணன்களும் நான் தான் ச்ரேஷ்டன், நான் தான் ச்ரேஷ்டன் என்று சண்டையிட்டன. அவைகள் தங்கள் பிதாவான ப்ரஹ்மாவினிடத்தில்சென் று எங்களில் ச்ரேஷ்டன் யார் என்று கேட்டன. (௬)

தாந்ஹோவாச யஸ்மிந்வ உத்க்ராந்தே ஶரீரம் பாபிஷ்டதரமிவ த்ருஶ்யேத ஸ வ: ஶ்ரேஷ்ட இதி ॥ ௭ ॥

ஸ0-ரா—உங்களில் யார் வெளிப்பட்டுப்போய்விட்டால் இந்த சரீரம் மிகவும் ஹேயமாகக்காணப்படுமோ, அவனே உங்களில் ச்ரேஷ்டனென்று அவர் பதில் சொன்னர். (௭

ஸா ஹ வாக்சக்ராம ஸா ஸம்வத்ஸரம் ப்ரோஷ்ய பர்யேத்யோவாச கதமஶகதர்தே மஜ்ஜீவிதுமிதி யதா கலா அவதந்த: ப்ராணந்த: ப்ராணேந பஶ்யந்தஶ்சக்ஷுஷா ஶ்ருண்வந்த: ஶ்ரோத்ரேண த்யாயந்தோ மநஸைவமிதி ப்ரவிவேஶ ஹ வாக் ॥ ௮ ॥

ஸ0-ரா—அதைக்கேட்ட ப்ராணன்களில் வாக்குமுதலில் வெளிப்பட்டுப்போய் ஒருவருஷகாலம் தனியேயிருந்து மறுபடிவந்து நீங்கள் நானில்லாமல் எப்படி ஜீவி

த்தீர்களென்று கேட்டது. ஊமைகள் வாக்கில்லாமையால் பேசமாட்டுகிறதில்லை ஆனாலும் ப்ராணனால் ஜீவித்துக்கொண்டும் கண்ணால் பார்த்துக்கொண்டும் காதால் கேட்டுக்கொண்டும் மனதால் ஆலோசித்துக்கொண்டும் தங்கள் தங்கள் காரியங்களை நடத்திக்கொள்வார்களல்லவா. அது போலவே நாங்களும் நடத்திக்கொண்டோமென்று மற்றவைசொல்லிற்றன. நான் ச்ரேஷ்டமன்றென்று ஒப்புக்கொண்டு வாக்கு மறுபடி பிரவேசித்துக்கொண்டது. (௮)

𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌹𑍋𑌚𑍍𑌚𑌕𑍍𑌰𑌾𑌮 𑌤𑌤𑍍𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌂 𑌪𑍍𑌰𑍋𑌷𑍍𑌯 𑌪𑌰𑍍𑌯𑍇𑌤𑍍𑌯𑍋𑌵𑌾𑌚 𑌕𑌥𑌮𑌶𑌕𑌤𑌰𑍍𑌤𑍇 𑌮𑌜𑍍𑌜𑍀𑌵𑌿𑌤𑍁𑌮𑌿𑌤𑌿 𑌯𑌥𑌾𑌨𑍍𑌧𑌾 𑌅𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌨 𑌵𑌦𑌨𑍍𑌤𑍋 𑌵𑌾𑌚𑌾 𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑍇𑌣 𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌤𑍋 𑌮𑌨𑌸𑍈𑌵𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌵𑌿𑌵𑍇𑌶 𑌹 𑌚𑌕𑍍𑌷𑍁𑌃 । ௯ ॥

ஸம்-ரா—பிறகு வாக்குபோலவே கண்ணானது ஒருவருஷம் வெளியேபோயிருந்துவந்து நானில்லாமல் நீங்கள் எப்படி ஜீவித்தீர்களென்று கேட்டது. குருடர்கள் கண் இல்லாமையால் பார்க்கக்கூடாமல் போனாலும் வாக்கினால் பேசுவதும் காதால் கேட்பதும் மனதால் யோசிப்பதும் ப்ராணனால் ஜீவிப்பதுமாயிருப்பதுபோல நாங்கள் இருந்தோமென்று அவைகள் பதில் சொல்லிற்றன. நான் ச்ரேஷ்டனன்றென்று கண் மறுபடிவந்து புகுந்துகொண்டது. (௯)

𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂 𑌹𑍋𑌚𑍍𑌚𑌕𑍍𑌰𑌾𑌮 𑌤𑌤𑍍𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌂 𑌪𑍍𑌰𑍋𑌷𑍍𑌯 𑌪𑌰𑍍𑌯𑍇𑌤𑍍𑌯𑍋𑌵𑌾𑌚 𑌕𑌥𑌮𑌶𑌕𑌤𑌰𑍍𑌤𑍇 𑌮𑌜𑍍𑌜𑍀𑌵𑌿𑌤𑍁𑌮𑌿𑌤𑌿 𑌯𑌥𑌾 𑌬𑌧𑌿𑌰𑌾 𑌅𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌨 𑌵𑌦𑌨𑍍𑌤𑍋 𑌵𑌾𑌚𑌾 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌤𑍋 𑌮𑌨𑌸𑍈𑌵𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌵𑌿𑌵𑍇𑌶 𑌹 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂 ॥ ௧௦ ॥

ஸம்-ரா—அப்படியே காது ஒருவருஷம் வெளியேபோயிருந்துவந்து கேட்டது. செவிடர்கள் காதால் கேளாமற்போனபோதிலும் மற்ற இந்திரிய வியாபாரங்களில் குறையாது நடப்பதுபோலவென்று அவைபதில சொல்லின. நான் ச்ரேஷ்டன் அன்றென்றுகாது மறுபடிவந்து புகுந்துக்கொண்டது. (௧௦)

𑌮𑌨𑍋 𑌹𑍋𑌚𑍍𑌚𑌕𑍍𑌰𑌾𑌮 𑌤𑌤𑍍𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌂 𑌪𑍍𑌰𑍋𑌷𑍍𑌯 𑌪𑌰𑍍𑌯𑍇𑌤𑍍𑌯𑍋𑌵𑌾𑌚 𑌕𑌥𑌮𑌶𑌕𑌤𑌰𑍍𑌤𑍇 𑌮𑌜𑍍𑌜𑍀𑌵𑌿𑌤𑍁𑌮𑌿𑌤𑌿 𑌯𑌥𑌾 𑌬𑌾𑌲𑌾 𑌅𑌮𑌨𑌸𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌨 𑌵𑌦𑌨𑍍𑌤𑍋 𑌵𑌾𑌚𑌾 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑍇𑌣𑍈𑌵𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌵𑌿𑌵𑍇𑌶 𑌹 𑌮𑌨𑌃 ॥ ௧௧ ॥

ஸம்-ரா—அப்படியே மனது ஒருவருஷம் வெளியேபோயிருந்துவந்து கேட்டது. மனதின் வ்யாபாரத்தை அறியாத குழந்தைகள் பார்ப்பதும் கேட்பதும் பேசுவதும் ஜீவிப்பதுமாயிருப்பதுபோல இருந்தோமென்று மற்றவை பதில் சொல்லின. நான் ச்ரேஷ்டனன்றென்று மனது மறுபடிவந்து புகுந்துகொண்டது. (௧௧)

𑌅𑌥 𑌹 𑌪𑍍𑌰𑌾𑌣 𑌉𑌚𑍍𑌚𑌿𑌕𑍍𑌰𑌮𑌿𑌷𑌨𑍍𑌤𑍍𑌸 𑌯𑌥𑌾 𑌸𑍁𑌹𑌯𑌃 𑌪𑌡𑍍𑌵𑍀𑌶𑌶𑌙𑍍𑌕𑍂𑌨𑍍𑌤𑍍𑌸𑌂𑌖𑌿𑌦𑍇𑌦𑍇𑌵𑌮𑌿𑌤𑌰𑌾𑌨𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌤𑍍𑌸𑌮𑌖𑌿𑌦𑌤𑍍𑌤𑌂 𑌹𑌾𑌭𑌿𑌸𑌮𑍇𑌤𑍍𑌯𑍋𑌚𑍁𑌰𑍍𑌭𑌗𑌵𑌨𑍍𑌨𑍇𑌧𑌿 𑌤𑍍𑌵𑌂 𑌨𑌃 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍋𑌽𑌸𑌿 𑌮𑍋𑌤𑍍𑌕𑍍𑌰𑌮𑍀𑌰𑌿𑌤𑌿 ॥ ௧௨ ॥

ஸம்-ரா—இவ்விதம் வாக்கு கண் காது மனது நாலும் பரீக்ஷைசெய்தபிறகு முக்கியப்ராணனானது வெளிப்புறப்படவேண்டுமென்று நினைத்தது; ஜாதி அச்வ

(ச, அப்படியே வஸிஷ்டாயஸ்வாஹா என்றும் ப்ரதிஷ்டாயை ஸ்வாஹா என்றும் ஸம்பதேஸ்வாஹா என்றும் ஆயதநாயஸ்வாஹா என்றும் தனித்தனி நெய்யால் ஹோமம்செய்து ஸ்ருதியை முன்புபோலத் தனித்தனி மந்தத்தில் சேர்க்கவேண்டும்.

தத்—பிறகு (சங்—அக்னியைவிட்டுக் கொஞ்சம் விலகி, ரங்—அக்னியை ஸேவித்து உபஸ்தானம் செய்து) கைகளைத்தப்பி அதில் மந்தத்தை வைத்துக்கொண்டு 'அமோ நாமாஸி' என்கிற மந்திரத்தை ஜபிக்கவேண்டும். அம: என்று ப்ராணனுக்குப் பெயர். அன்னத்தாலேயே ப்ராணன் தேஹத்தில் நிற்பதால் இந்த மந்தத்திரமும் ப்ராணனாக ஸ்துதிக்கப்படுகிறது. நீ அம: என்னும் பெயரையுடையவன். நீ ப்ராணஸ்வரூபனே. (௫)

அமோநாமாஸ்யமா ஹி தே ஸர்வமிதஸ் ஸ ஹி ஜ்யேஷ்ட: ச்ரேஷ்டோ ராஜாதிபதி: ஸ மா ஜ்யைஷ்ட்யஸ் ச்ரைஷ்ட்யஸ் ராஜ்யமாதிபத்யம் கமயத்வஹமேவேதஸ் ஸர்வமஸாநீதி ॥ ௬ ॥

(சங்—உன்னுடன் கூடவே உன்னுடையதான எல்லாப் பிராணிகளும் இருப்பதால் நீ அமா. ரங்—நீயே ப்ராணன் ஆகையால் நீயே அமா.) எல்லாம் உன் அதீனம். ப்ராணனென்கிற திரவியமே பெரியதும் மேற்பட்டதும் ப்ரகாசமுடையதும் எல்லாவற்றையும் ரக்ஷிப்பதும், ஆகையால் அது எனக்குப் பெருமை மேன்மை காந்திரக்ஷணசக்தி இவைகளைக் கொடுக்கட்டும். (சங்—நானே இந்த ஜகத்தெல்லாமாகக் கடவேன். ரங்—நான் எல்லாவற்றிற்கும் நியந்தாயாகக்கடவேன்.) என்பது மந்திரத்தின் பொருள். (௬)

அத கல்வேதயர்சா பச்ச ஆசாமதி தத்ஸவிதுர்வ்ருணீமஹ இத்யாசாமதி வயம் தேவஸ்ய போஜநமித்யாசாமதி ச்ரேஷ்டஸ் ஸர்வதாதமமித்யாசாமதி துரம் பகஸ்ய தீமஹீதி ஸர்வம் பிபதி ॥ ௭ ॥

ஸம்-ரா—பிறகு 'தத்ஸவிதுர்வ்ருணீமஹே' என்று ஒருதரமும் 'வயம் தேவஸ்ய போஜனம்' என்று ஒருதரமும் 'ச்ரேஷ்டம் ஸர்வதாதமம்' என்றொருதரமும் ஆக கொஞ்சம் கொஞ்சம் புசித்து துரம்பகஸ்யதீமஹி என்று எல்லாவற்றையும் புசித்துவிடுவது.

நிர்ணிஜ்ய கஸ்ஸம் சமஸம் வா பச்சாதக்நே: ஸம்விசதி சர்மணி வா ஸ்தண்டிலே வா வாசம்யமோ(அ)ப்ரஸாஹ: ஸ யதி ஸ்த்ரியம் பச்யேத்ஸம்ருத்தம் கர்மேதி வித்யாத் ॥ ௮ ॥ ததேஷ ச்லோக: யதா கர்மஸு காம்யேஷு ஸ்த்ரியஸ் ஸ்வப்நேஷு பச்யதி ஸம்ருத்திம் தத்ர ஜாநீயாத்தஸ்மிந்ஸ்வப்நநிதர்சநே தஸ்மிந்ஸ்வப்நநிதர்சநே ॥ ௯ ॥

